பக்கங்கள்: பதினாங்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 08 புதன்கிழமை (21-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:115

# பேச்சு நடத்த புலிகள் முன்வந்ததை கனடா மகிழ்வோடு வரவேற்கின்றது



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதர் ருத் ஆர்ச்சி போல்த் நேற்று யாழ்.ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தூதரையும் யாழ்.ஆஸ்பத்திரியில் பணியாற்றும் பிரெஞ்சு மருத்துவக் குழு டாக்டர் ஒருவரையும் முதல் படத்தில் காணலாம்.

தூதருடன் வருகை தந்துள்ள 'சீடா' நிறுவன அதிகாரி ஜோ.வில்லியம் மற்றும் யாழ்.ஆஸ்பத்திரி டாக்டர் ரீ.அம்பலவாணர், கண் சத்திரசிகிச்சை நிபுணர் ச.குகதாசன், நிர்வாக அதிகாரி எஸ்.பத்மநாதன் மற்றும் டாக்டர் மகாதேவா ஆகியோரை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ஐ-5)

## அந் நாட்டுத் தூதர் யாழ்.நகரில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச்21

தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சியான விடயம். இதனைக் கனடா வரவேற்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான கனேடியத் தூதர் ருத் ஆர்ச்சி போல்த்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கனேடியத் தூதர் நேற்று முற்பகல் யாழ்.கியூடெக் நிறுவன அலுவலகத்தில் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

அப்போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட

(14ஆம் பக்கம் பார்க்க)

## தரைவழிப் பாதை ஒன்றைத் திறக்க அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

### கனேடியத் தூதரிடம் யாழ். ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் நிலவும் நிம்மதியான, சுமுகமான நிலை தொடரவேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள். மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வசதியாக குடாநாட்டுக்கும் வெளிமாவட்டங்களுக்குமான தரைவழிப் பாதையைத் திறகக இலங்கை அரசுக்கு கனடா போன்ற சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கனேடியத் தூதர் ருத் ஆர்ச்சி போல்த்திடம் யாழ்.ஆயர் அதி வண.தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

ஆயர் இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

அண்மையில் தாம் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக ஆயர் கனேடியத் தூதரிடம் எடுத்துக் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை மேற்கொள்ள ஜனாதிபதி கொண்டுள்ள ஆர்வத்தையும் ஆயர் தூதரிடம் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி ஆர்வமாக இருப்பதை அவருடன் நடத்திய கலந்துரையாடல்களின் போது உணர்ந்தேன். அவர் தனியாக இந்த விடயத்தில் ஆர்வமாக இருந்து பயன் இல்லை. பல தரப்பட்டவர்களின் கருத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு.மாந்தீவில் உள்ள

## தொழுநோய் ஆஸ்பத்திரி படை முகாமாகின்றது!

மட்டக்களப்பு,மார்ச்21

மட்டக்களப்பு - மாந்தீவு தொழுநோயாளர் ஆஸ்பத்திரியை படையினர் கையேற்கவுள்ளதாக இணையச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

அந்த ஆஸ்பத்திரியின் சகல பகுதிகளும் படையினரின் பாவனைக்கு பயன்படுத்தப்படவுள்ளது. இதற்கு வசதியாக ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் தொழு நோயாளர்கள் அனைவரும் எதிர் வரும் 28ஆம் திகதிக்கு முன்பாக நாகம ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் மேற்படி ஆஸ்பத்திரியை அங்கிருந்து இடமாற்றம் செய்வதற்கு சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. எனினும் தமிழ், முஸ்லீம் நோயாளர்களும் ஏனைய மக்களும் அதனை ஆட்சேபித்து எடுத்த உடனடி நடவடிக்கையை அடுத்து அந்த முயற்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

### திருமண வீடு சென்று திரும்புகையில் அனர்த்தம்:

## 6 தமிழர்கள் உட்பட 8 பேர் மிகிந்தலையில் விபத்தில் பலி!

வவுனியா,மார்ச்21

திருகோணமலையில் திருமண வைபவம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு வவுனியா திரும்பிக் கொண்டிருந்தோர் பயணம் செய்த வான் விபத்துக்குள்ளானதில் இரு குழந்தைகள் உட்பட எட்டுப் பேர் உயிரிழந்தனர் ஒன்பது பேர் காயம் அடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மிகிந்தலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தமிழ்க் குடும்பம் ஒன்றை ஏற்றிச் சென்று கொண்டிருந்த வான் மற்றொரு வாகனத்துக்கு வழிவிட்ட சமயமே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வானில் பயணம் செய்தோரில் ஆறுபேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்கள் அறுவரும் தமிழர்கள். வான் விபத்துக்குள்ளான

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிரான மனு சர்வதேச நீதிமன்று நிராகரிப்பு

ஸ்ரொக்ஹோம்,மார்ச்21

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கைதுசெய்து விசாரணை செய்யவேண்டும் என்று கோரி நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு பொறுப்பானவர் சந்திரிகா குமாரதுங்க தான் என்று தெரிவித்து இரு ஈழத் தமிழர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு தொடர்பாக உகந்த காரணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அதனை நிராகரிப்பதாக சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். (ஐ-3)

## 'பொங்கு தமிழ்' நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

'தமிழ் மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே' என்பதை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'பொங்கு தமிழ' எழுச்சி நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் இந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் மீண்டும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் - மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3-6)

### ஸ்ரீலங்கா கடற்படையின் தாக்குதலுக்கு ஆட்சேபம்:

## மேயர் ஸ்டாலின் தலைமையில் தமிழக மீனவர் ஆர்ப்பாட்டம்!

சென்னை,மார்ச்21

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களைக் கண்டித்து நேற்று சென்னையிலுள்ள இலங்கைக்கான உதவித் தூதுவர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தி.மு.கவின் இளைஞர் அணி இதனை ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு முன்னர் ஆழ்வார்ப்பேட்டையில் இருந்து தூதரகம் வரை பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்திற்கு தி.மு.கவின் இளைஞர் அணி செயலரும் சென்னை மேயருமான மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். (ஐ-7)

## பாடசாலை மாணவருக்கு மீண்டும் மதிய உணவு

கொழும்பு,மார்ச்21

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் இந்த ஆண்டு இரண்டாம் தவணை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த நேற்று நாடாளுமன்றில் இதனை அறிவித்தார்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் ஒதுக்கீடு தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மதிய உணவு வழங்கும் திட்டத்துக்காக முதலில் போசாக்குக் குறைவான மாணவர்கள் கற்கும் பாடசாலைகள் தெரிவுசெய்யப்படும். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் ஒன்று முதல் தரம் 13 வரையிலான சகல

(14ஆம் பக்கம் பார்க்க)

# குடத்தனை இளைஞரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்21

குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடந்த 5 மாதங்களாகக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடத்தனை கிழக்கைச் சேர்ந்த சிவகுரு சுகந்தன் (வயது 21) என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறைக்குச் செல்வதாகக் கூறி, வீட்டில இருந்து சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைபபாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

### திரு.சி.சிவகணேசசுந்தரன்

அவர்கள இலங்கை அதிபர் சேவையின் தரம் 2-1 இற்கு பதவி உயாவு பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதுடன் அவர் மேலும பல பதவி உயர்வுகளைப் பெற்று மேன்மையுற உளமார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை.

(C/15812)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 17 |  | 01 |
| 09 | | 04 |
| 1922 | | 2000 |

### அமரர் வல்லிபுரம் கனகசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி: 21.03.2001

கண்ணை இமை காப்பது போல் எமைக்
காத்து நின்றீரே - அப்பா!
காலமெல்லாம் தரணியில் தலைநிமிர்ந்து நாம்
வாழ வழி அமைத்தீரே - அப்பா!
கண் மூடித் திறப்பதற்குள் எங்கு தான்
சென்றீரோ? - அப்பா!
அன்புத் தந்தையே! எமக்கு ஆறுதல் யாரோ?
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாறாத அன்புடன்
- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
*"ஈஸ்வரி வாசா"*
*முருகன் கோயில் வீதி,*
*நெல்லியடி.*

நிரந்தர முகவரி:
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

(C/15808)

## வீடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப படக்காட்சித் தொடரில் அடுத்ததாக பாலுமகேந்திராவினால் தொலைகாட்சிக்காக படமாக்கப்பட்ட மூன்று மணி நேர குறுந்திரைப்படத் தொகுப்பு ஒன்று காண்பிக்கப்படவுள்ளது

இத்திரைப்பட தொகுப்பில் படமாகியுள்ள சிறுகதைகள் சுஜாதாவின் 'அம்மா', 'நிஜத்தை தேடி', 'ரேணுகா', 'அறைவைத்தியம்', 'அவசரம்' பட்டுக்கோட்டை பிரபாகரின் 'தாயும் தாரமும்', 'கற்பு' மற்றும் மாலனின் 'தப்புக்கணக்கு' என்பனவாகும். இக் குறும் திரைப்படத் தொகுப்பு 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு புவியயற்றுறை மணடபத்தில் காண்பிக்கப்படும்

ஆர்வலர்கள் பங்கு பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (க)

A/L 2003
புதிய பிரிவுகள்
✪ கலை, வர்த்தக, கணித விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
✪ நேரஅட்டவணையைப் பெறவும்.
SHAMROCK
(C/15806)

ராஜா
யாழ்ப்பாணம்
11 அக்கடமி அவார்ட் பெற்ற சிறந்த படம்
டைட்டானிக்
தமிழில்
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
28.03.2001 முதல்
வானத்தைப் போல
(C/15741)

லஷ்சுமி இணுவில்
விஜயகாந்த் (3வேடங்கள்)
மந்த்ரா, செந்தில்
நடித்த
சிம்மாசனம்
(ரீல்ஸ்) காட்சிகள் 11.00, 2.30 (பு.நே.)

நாகம்ஸ்
சுன்னாகம்
பிரசாந்த், தேவயானி,
பிரகாஷ்ராஜ் நடித்த
அப்பு
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
21 முதல்
காதலர் தினம்
(85458)

நீங்களும் ஏன் கணனிபற்றி அறியக்கூடாது?
உங்கள் அறிவுக்கான எங்கள் பங்களிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட வகுப்புக்களாக
Computer Handling
MS WINDOWS
MS WORD
MS EXCEL
INTERNET & E-MAIL
200/= Per Month
Start on
21, 25-03-2001
STP®
Computer World (Pvt) Limited
54A, Palaly Road Kantharmadam, Jaffna. T.P:2674

## மரண அறிவித்தல்கள்

### செல்லமுத்து சரவணமுத்து

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் பறாளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து சரவணமுத்து நேற்று (20.03.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், செல்லத்துரை (கொழும்பு), குணராஜா (சுவிஸ்), தேவராஜா (சுவிஸ்), மகாராஜா (லண்டன்), பரமேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இராசமணி, சபாரத்தினம், தயாநிதி, செந்தில்ராணி, சுபாசினி ஆகியோரின் மாமனாரும் சிபாஸ்கரன் (கனடா), கிருபாகரன் (லண்டன்), பிரபாகரன், அகிலா, அஜந்தன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்தம்பி மற்றும் கந்தவனம், பொன்னம்பலம், பொன்னு, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-03-2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பறாளாய் வீதி, சுழிபுரம்.*
நிரந்தர முகவரி:
*பலாலி கிழக்கு.* (85667)

தகவல்:
ச.சபாரத்தினம் (மருமகன்)
செல்லத்துரை (மகன்)

### திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை

(அருமை - பளை)

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் துன்னாலை வடக்கு, கரவெட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் அமிர்தாம்பிகை (அருமை) அவர்கள் கடந்த (17-03-2001) சனிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் யோகராணி, இராசாம்பிகை (அதிபர், பளை றோ.க.த. பாடசாலை), அரியதேவி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (ஜேர்மனி), லோகநாதன் (லண்டன்), லோகபாலேந்திரன் (கனடா), வஜஞாம்பிகை (விஜி-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா, குமாரவேலு (சமாதான நீதிவான், பளை), வண்ணை ஆனந்தன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமாரி (ஜேர்மனி), கிருஷ்ணவாணி (கனடா), கருணாநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அகிலா (லண்டன்), வினோ, வாகீசன் (லண்டன்), கௌரீசன் (லண்டன்), நிறஞ்சன், யசோதரா (மாணவி, பளை ம.கல்லூரி), தமிழ்வேந்தன் (ஜேர்மனி), சாகித்தியன் (கனடா), நிரோஜன், காலஞ்சென்ற கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-03-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் துன்னாலை ஓடைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

நிரந்தர முகவரி:
பளை.

தகவல்:
திரு.திருமதி குமாரவேலு.

(85686)

## விசேட தள்ளுபடி விலையில் பொருள்கள் விற்பனை
## காலம் 11-03-2001 முதல் 11-04-2001 வரை

✪ மின்விசிறிகள்
✪ மேசை மின்சார விசிறிகள்
✪ மின்சாரக் கேற்றில்கள் (இரண்டு அளவுகளில்)
✪ மின்சார பொயிலர்கள் (இரண்டு அளவுகளில்)
✪ மின்னழுத்திகள்
✪ தரமான சீனத் தயாரிப்பு மின்னடுப்புகள்
✪ மின்சார மேசை விளக்குகள் (பல அளவுகளில்)
✪ இறக்குமதி செய்யப்பட்ட தரமான ரியூப் லைற்றுகள்
✪ வீட்டுப்பாவனைக்குரிய மின்சாரப் பொருள்கள்
✪ எஸ் லோன் பைப்புகள், இணைப்புகள்
✪ மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்

இப்பொருள்கள் யாவும் மேலே குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் விசேட தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படும். இதேவேளை 500/- ரூபாவுக்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு 3 முதன்மைப் பரிசுகளும் 7 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். இப்பரிசுப் பொருள்கள் காட்சி மேடையில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும் எமது ஸ்தாபனத்தின் நீண்டகால மின் இணைப்பாளர்கள் மூவருக்கு விசேட பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதைவிட எம்மிடம் பொருள்களைக் கொள்வனவு செய்யும் மின் இணைப்பாளர்கள், பைப் இணைப்பாளர்கள் ஆகியோரில் அதிர்ஷ்ட சாலிகளான 5 பேருக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. ஆரம்ப காலம் முதல் இன்றுவரை எமக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

12.04.2001 வியாழக்கிழமை அன்று நடைபெறவுள்ள 50 ஆண்டு பூர்த்திவிழாவில் வாடிக்கையாளர்கள் எல்லோரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். பரிசுத் திட்ட முடிவுகள் 14.04.2001 அன்று உதயனில் வெளியிடப்படும்.

## நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்,

141,143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி 2037

(85675)

உதயன்

# ஜனாதிபதிக்கு பலம் கிடைக்கட்டும்

இனப்பிரச்சினைக்குத்தீர்வு ஒன்றைக் காணும் முகமாக விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தையின் போது, நியாயமான விட்டுக்கொடுப்புகளைச்செய்வதற்கு அரசாங்கத் தரப்புத்தயாராக இருப்பதாக—

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம்தெரிவித்த ஆக்கபூர்வமான கருத்தினை நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

அமைச்சர் பீரிஸ் கூறியதை உறுதிப்படுத்துவது போல, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரசெல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களிடம்கருத்துக் கூறியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தால், ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தில், விடுதலைப் புலிகளின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இணக்கம் காணப்படும் அம்சங்களைச் சேர்க்கவும் தாம் தயார் என்றவாறு, ஜனாதிபதி ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கூறுவது உண்மையாக இருந்தால், பேச்சுவார்த்தைகள் மூலம் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் மலரும்.

ஜனாதிபதி கூறுவதில் நம்பிக்கை வைக்கமுடியுமா என்று எவரும் சந்தேகம் கொள்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஏனெனில் சர்வதேசங்களைத் திருப்திப்படுத்த அல்லது மனங்குளிரச் செய்ய வெளிநாடுகளுக்குச் செல்லும் போது, தமிழ் மக்களுக்கு எதிராக இவரா போர் நடத்துகிறார் என்று ஐயுறத்தக்க வகையில் அவர் கருத்துத் தெரிவிப்பது உண்டு. ஆனால் உள்நாட்டில் அவரது செயற்பாடும் நடவடிக்கைகளும் அதற்கு இசைவாக இருப்பதில்லை.

உள்நாட்டில் செல்வாக்குள்ள பல்வேறு சக்திகளின் அழுத்தங்களினாலும் வேறு வகை நெருக்குதல்களினாலும் வெளிநாடுகளில் அல்லது வெளிநாட்டுத் தலைவர்களிடம் கூறிய கருத்துக்களை ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்த முடிவதில்லை.

சென்றவருடம் ஓகஸ்ட் மாதம் அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளையே தெற்கின் பேரினவாத சக்திகள் எதிர்த்தன; ஆட்சேபித்தன. தமிழர்களுக்குத் தனிநாடு வழங்கப்படுகின்றது என்றவாறாக மூர்த்தண்யமாக எதிர்த்தன; ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தின.

இவை எல்லாவற்றையும் மனதிற் கொண்டு, ஞாபகப்படுத்தி, அந்தச் சக்திகளைச் சமாளித்து அழுத்தங்களைப் பொருட்படுத்தாமல் செயற்படஇயலும் என்ற துணிவு ஜனாதிபதிக்குப் பிறந்திருந்தால் மட்டுமே ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களுக்கு அவர் கூறியதைச் செயலாக்க முடியும்.

இந்த நாடு சீரழியாது தடுக்க வேண்டுமானால், அதன் தலைவர் அரசியல் மற்றும் தனியாள் துணிச்சலைத் தனதாக்கிக் கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளுக்கு மாறான அல்லது அரைகுறையான தீர்வு ஒன்றைத் திணிக்காமல், நியாயமான, நீதியான தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு துணிவு வரவேண்டும். அதற்கான மனப்பலமும் ஆன்மபலமும் கிடைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் நிச்சயம் பிரார்த்திப்பார்கள்.

# தென்னிலங்கை வாழ் மக்களும் சமாதானத்தையேவிரும்புகின்றனர்

## லயன்ஸ் கழக ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடபகுதியில் வாழும் மக்களைப் போலவே தென்னிலங்கை மக்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்று இலங்கை லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆளுநர் லயன். ரோகித தளுவத்த தெரிவித்தார்.

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் கூட்டமைப்பு அன்பளிப்புச் செய்த 45 லட்சம் ரூபா பெறுமதியான கண் சத்திர சிகிச்சை உபகரணங்களை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கையளித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

தளுவத்த தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் மட்டுமன்றி தென்னிலங்கை மக்களும் போதிய மருத்துவ வசதிகள் இன்றி கஷ்டப்படுகிறார்கள். சமாதானம் நிலவாததாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே தென்னிலங்கை மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர்.

வடக்கில் வாழும் மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்களை வழங்கும் இந்த நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வந்து கலந்துகொள்வது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

தெற்குக்கும் வடக்குக்கும் பாலமாக லயன்ஸ் கழகங்கள் செயற்படுகின்றன. இந்தப் பணி மேலும் சிறப்பாகத் தொடரும் என்று லயன். ரோகித தளுவத்த குறிப்பிட்டார்.

யாழ். ஆயர்சார்பில் விழாவில் கலந்துகொண்ட வண. பிதா. செல்வராஜா உரையாற்றுகையில் குடாநாட்டில் கண் சத்திர சிகிச்சை முக்கிய பிரச்சினையாக உள்ள காலகட்டத்தில் லயன்ஸ் கழகம் உபகரணங்களை வழங்கியிருப்பதை வரவேற்றார்.

நல்லை ஆதீன முதல்வர் உரையாற்றிய போது, லயன்ஸ் கழகங்கள் மக்களுக்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டிப் பேசினார்.

ஆறு. திருமுருகன் தனது உரையில் லயன்ஸ்கழகச் சேவைகளில் ஈடுபடுபவர்கள் புண்ணிய பணியில் ஈடுபடுவதாகவும்— தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையை இயங்க வைக்க லயன்ஸ் கழகத்தினர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நிகழ்வில் பங்குபற்றியவர்களும், உரையாற்றியவர்களும், மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் தளராது மிகச்சிறப்பாகப் பணியாற்றி வரும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாஸனை பாராட்டினார்கள்.

(ஒ - 9)

# கணனிப் பாட ஆசிரிய ஆலோசகர் பதவிகள்

## 26ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குக!

தென்மராட்சி, மார்ச் 21

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் கணனிப் பாட ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் கணனிப் பாடத்தில் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கணனி விஞ்ஞானபாடத்தில் பட்டம் பெற்றவர்கள் பல்கலைக்கழகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் கணனி விஞ்ஞான பாடத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் அல்லது கணனிப் பாட நெறியைப் பின்பற்றி கணனிப் பாடத்தைக் கற்பிப்பதில் மூன்று வருட அனுபவம் உடைய 45 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்களிடம் இருந்தே இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## பங்கீட்டு அட்டைக்கு தேங்காய்

தென்மராட்சி, மார்ச் 21

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கரம்பகம் தோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தேங்காய்கள் பளைப் பிரதேச மக்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் திங்கட்கிழமை முதல் அல்வாயில் உள்ள சபை அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை தேங்காய் பெற்றுக்கொள்ளாத பளைப் பிரதேச மக்கள் தமது பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு சபைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ம-117)

## 14 சிப்பாய்களும் தொடர்ந்து விளக்கமறியலில்

மிருசுவில் புதைகுழிப் படுகொலைச் சந்தேக நபர்களான 14 சிப்பாய்களும் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-117)

## நாளை

பங்குனி 9

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

பி. இ.: 4. 26 வரை.

பிரதோஷ விரதம்

நட்சத்திரம்: அவிட்டம்

பி.ப.: 12-45 வரை.

சுபநேரம்: 7.47 — 9.17

ராகுகாலம்: 1.47 — 3.17

(பழைய நேரப்படி)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, மார்ச் 21

துன்னாலை வடக்கு வல்லியானந்தம் விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுன்னாகம் கதிரமலைசிவன் தேவஸ்தான பிரதமகுரு முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் இக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். [க-173]

★ ★ ★

ஏழாலை மந்தி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6.17 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் எண்ணெய்க்காப்புச் சாத்தல் இடம்பெறும். (க-10)

**உதயவாக்கு**

தன்னையறிவது அறிவு; தன்னை மறப்பது மடமை.

# சமய சந்நிதிகளில்

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் தினமும் மாலையில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது. (க-17)

★ ★ ★

அளவெட்டி கிழக்கு, கும்பலை மனற்புலம் நரசிங்க வைரவர் கோயில் ஜீர்ணோத்தாரண நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு நடைபெற உள்ளது. (க-ரி)

★ ★ ★

வடமராட்சி அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. [கரி]

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் ஆ. சபாநாயகன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கோப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் கலந்துகொள்வார். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

உயரப்புலம் மெ. மி. த. க. வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ. விவேகானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் கலந்து கொள்வார். (ம)

★ ★ ★

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தின் இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ஆ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும். (ம—51)

★ ★ ★

குருநகர், மார்ச் 21

யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வ. ம. எட்லேட் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் பிரதம விருந்தினராகவும் குருநகர் பங்குத் தந்தை பி. எவ். பொனிபஸ் அடிகள், சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் அ. அகஸ்ரின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ம—51)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 21

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு அமைச்சின் விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையேநடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள்வருமாறு:-

★ நெடுந்தீவு பிரதேச செயலகம் எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்.

★ ஊர்காவற்துறை பிரதேச செயலகம் எதிர் நல்லூர் பிரதேச செயலகம். (க-86)

★ ★ ★

மகாஜனக் கல்லூரிக்கும் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான மேதாற்பந்து துடுப்பாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நீண்டகாலத்தின் பின்னர் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இத்தகைய போட்டி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (க-86)

# யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

## அமைதி நிலை தருவாய் ஐயனே!

வண்ணையெனும் பதியினிலே அமர்ந்த முக்கண்ணனே!
விடமுண்டு தேவர்தமைக் காத்த நீலகண்டனே!
பெண்ணவளைப் பாகமெனக் கொண்ட சிவநாதனே!
திங்களினை முடியினிலே அணிந்(து) அபயம்
அளித்தவனே?
எண்ணமதில் நிறைந்திருக்கும் எங்கள் கருணாகரனே!
கங்கைதனைச் சடையினிலே தாங்கிப்
புவி காத்தவனே!
மண்ணுலகில் அமைதிநிலை தந்திடுவாய் ஐயனே!
முழுமுதலே! மார்க்கண்டேயருக்(கு)
அருள் புரிந்தவனே!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

### கடலில் தொழில் செய்ய விதிக்கப்பட்டுள்ள

# கட்டுப்பாடுகளை உடன் தளர்த்தி மீனவர் துன்பங்களை நீக்குங்கள்!

## ஜனாதிபதிக்கு மகஜர்

வடமராட்சி, மார்ச் 21

மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை உடன் தளர்த்தி மீனவர்களின் கஷ்டங்களை நீக்குமாறு கோரி, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து பருத்தித்துறைச் செயலகம் முன்பாக வடமராட்சி வடக்கு மீனவர்கள் நேற்று முன்தினம் நடத்திய மறியல் போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான இந்த மகஜர் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1996 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எமது சங்க உறுப்பினர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் மீன்பிடித் தொழிலில் சுமுகமாக ஈடுபட முடியவில்லை.

கடற்கரை எங்கும் முட்கம்பிகளால் வேலியிடப்பட்டு கடலுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. காலத்துக்குக் காலம் மீன்பிடிக்கும் நேரமும், தூரமும் மாற்றப்படுவதுடன் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனால் மீனவர்கள் சாதாரணமாகத் தொழிலில் ஈடுபட முடியவில்லை.

தற்போது காலை 7 மணி முதல் பகல் 10 மணிவரை மீன்பிடிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் இதற்கு முன்னர் எப்போதுமே இத்தகைய நேரங்களில் மீன் பிடித்தது கிடையாது. இந்த நேரத்தில் மீன் பிடிப்பதில் எந்தவித பயனும் இல்லை.

இந்தக் கட்டுப்பாடுகளால் மீனவர்கள்வருமானம்இன்றித் தவிக்கிறார்கள். ஆகவே கீழ் வரும் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

நள்ளிரவு 12 மணி தொடக்கம் பகல் 10 மணிவரை மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

★ அனைவரும் ஒரே சமயத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

★ மீனவர் நிவாரணம் அதிகரிக்கப்பட வேண்டும்.

★ உலர் உணவுப் பங்கீட்டின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும்.

★ இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-173)

# மூளாய் வைத்தியசாலையில் 176 பேருக்கு கண் பரிசோதனை

## மூன்றாவது தடவையாக இலவச முகாம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 21

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சமாஜமும் இணைந்து மூன்றாவது தடவையாக சென்றவாரம் நடத்திய விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாமின் போது 176 பேருக்கு கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் கண்பரிசோதனைகளை மேற்கொண்டார்.

இதன் போது, காரைநகர் பகுதியைச் சேர்ந்த மக்களே அதிக அளவில் வருகை தந்திருந்தனர், கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த பல முதியவர்களும் கண்பரிசோதனை செய்து கொண்டனர்.

விழிவெண்படலத்தால் பாதிக்கப்பட்ட 16 பேருக்கு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து கண் சத்திரசிகிச்சை செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டன.

இம்முகாமை நெறிப்படுத்திய லயன்ஸ் சுழக சேவைத் திட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜா லயன்ஸ் கழகம் இதுவரை மேற்கொண்ட 40 கண் வைத்திய முகாம்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வசதி குறைந்த மக்களுக்கு கண்பரிசோதனைகளை டாக்டர் குகதாசன் மேற்கொண்டு கண் சத்திர சிகிச்சைகளையும் செய்துள்ளார் எனக் கூறினார்.

மேற்படி சிகிச்சை முகாமின் முடிவில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாக சபைத் தலைவர் இரத்தினசிங்கம் தலைமையில் கூட்டமொன்றும் நடைபெற்றது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் விஜயம் செய்ய தொடங்கிய பின்னர் ஆரம்பகாலத்தில் டாக்டர் சாக்கோ, டாக்டர் பரராசசிங்கம் சேவையாற்றிய போது இருந்த நிலைக்கு தற்போது நோயாளர் வருகை அதிகரித்திருப்பதாக தலைவர் இரத்தினசிங்கம் குறிப்பிட்டார்.

(க-152)

# உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு நடத்துவது?

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராயும்

கொழும்பு, மார்ச் 21

உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து தெரிவுக்குழு ஒன்றை நியமித்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க கோரியுள்ளார்.

இதற்கான பிரேரணையை அவர் நாடாளுமன்றில் கடந்த சனிக்கிழமை சமர்ப்பித்தார்.

இந்தத் தெரிவுக்குழுவில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள்.

தேர்தலைத் தொகுதி முறையில் நடத்துவதா, விகிதாசார முறையில் நடத்துவதா என்பதுகுறித்துத் தெரிவுக்குழுவினர் ஆராய்வர்.

உள்ளூராட்சி மன்றத் தலைவர்களை மக்களின் விருப்பு வாக்குகளின் அடிப்படையிலா, உறுப்பினர்களின் தெரிவின் அடிப்படையிலா தெரிவு செய்வது என்பது குறித்தும் இந்தத் தெரிவுக் குழு ஆராயும்.

தொகுதி எல்லைகளை வகுப்பதற்குக் குழு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழக இசைத் துறை மிருதங்க விரிவுரையாளர் மா. சிதம்பரநாதனின் மாணவனான ஸ்ரீ விக்னேஸ்வரன் உமாசுதனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர் வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குவார். (ம)


## இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

எமது பாடசாலைச் சிற்பிகளான

திரு. சி. மணியம் SLPS 2 I
திருமதி த. தனலிங்கம் SLPS 2 I
திருமதி இ. சோமசுந்தரம் SLTS I
திரு. க. பரிபூரானந்தன் SLTS I
திருமதி இ. தனபாலசிங்கம் SLTS I

ஆகியோர் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவர்கள் அனைவரையும் மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன் புரிச் சங்கம்
யா/ வயாவிளான் ம. ம. வித்.

உரும்பிராய். (சி/15814)



## கண்ணீர் அஞ்சலி

கிளி/ பளை றோ. க. த. க. பாடசாலை அதிபர்
திருமதி இ. குமாரவேலு அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி அமிர்தாம்பிகை அருணாசலம்

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்களும்,
தற்காலிகமாக இணைந்துள்ள
ஆசிரியர்களும்,
கிளி/ பளை றோ. க. த. க.பாடசாலை
பளை.

(சி/15811)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி சி. சுமதசாந்தினி அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி சி. கண்மணி

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

4 ஆம் வருட மாணவர்கள்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(85668)



யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

செய்முறைப்பரீட்சை
- நாடகமும்
அரங்கியலும்
கலைமாணி
பகுதி- II 1999
(வெளிவாரி)

மேற்படி செய்முறைப் பரீட்சை தொடர்பாக பரீட்சார்த்திகள் 28-03-2001 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தலைவர் (நுண்கலைத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி) அவர்களைச் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்

20-03-2001
(சி/15815)



## மரண அறிவித்தல்கள்

### ஜோர்ச் இராஜரட்ணம்

(ஓய்வூதியர், யாழ் போதனா வைத்தியசாலை)

கோப்பாய்-இருபாலை கிழக்கைச் சேர்ந்த ஜோர்ச் இராஜரட்ணம் கடந்த (15—03—2001) வியாழக் கிழமை கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஜோர்ச் விசுவநாயகம்-ராணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி அந்தோனியாப்பிள்ளையின் பாசமிகு கணவரும், ஜூலியட், பிறின்ஸ் யோகராஜா, அன்டன் அமல்ராஜா, ஜோண்சன் ஜீவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரட்ணகுலசிங்கம், கமலராணி, நிமாலின் மரியேறற் நிமலராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி றீட்டாபெல்த்மென், காலஞ்சென்றமேரி மாகிறெட்டின் அன்பு மைத்துனரும், டிலானி, பிரியங்கா, ஷாரங்கா, அவிநாஷ், ஆக்காஷ், நிதர்சன், றீவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17—03—2001) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
க. மயில்வாகனம்.

Prince Yogarajah,
2645, Kipling Ave,
# 107, Rexdale Ont,
Mg V3 56, Canada.
Tele Phone: 416 406 0009

(85673)

திருமதி
### மீனாட்சியம்மா சதாசிவக்குருக்கள்

திருமதி மீனாட்சியம்மா சதாசிவக் குருக்கள் அவர்கள் கடந்த (19 03 2001) திங்கட்கிழமை மட்டக்களப்பு காரைதீவில் இறைபதம் எய்திவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சா. சோமாஸ்கந்த குருக்கள்
(மகன்)

இமையாணன்.
உடுப்பிட்டி.

(85665)

# வத்தளை, கல்கிசையில் கைதான 24 இளைஞர் தொடர்ந்து தடுத்துவைப்பு

கொழும்பு,மார்ச்21

வத்தளை மற்றும் கல்கிசைப் பகுதிகளில் கைதுசெய்யப்பட்ட தமிழ இளைஞர்களில் 24 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மேற்படி பகுதிகளில் படையினர் நடத்திய தேடுதலின் போது 40 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 16 பேர் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

வத்தளையில் கைது செய்யப்பட்டவர்கள் ஹற்றன், பொகவந்தலாவை, மஸ்கெலியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் ஆவர். தொழில் செய்வதற்காக வத்தளை பகுதிகளில் உள்ள கடைகளில் இவர்கள் பணிபுரிந்து வந்தனர். இவர்களிடம் பொலீஸ் பதிவு அத்தாட்சிகள் காணப்படாததாலேயே பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசையில் பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் மட்டுமல்லாது பிடிவிறாந்தில் உள்ளவர்கள், கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு முயற்சிகளில் ஈடுபட்டவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 10 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுளளனர்.

இவர்களில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய வட-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (க)

# திருவடிநிலையில் ஈமக்கிரியை நடத்த உதவுமாறு கோரிக்கை

## அமைச்சர் டக்ளஸுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

திருவடிநிலை, பொன்னாலை இந்து மயானத்தில் பொதுமக்கள் ஈமக்கிரியைகளைச் சுதந்திரமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் ஒன்றியக் கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

அதை அடுத்து வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் ஊடாக இந்தக் கோரிக்கை அமைச்சருக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விரு மயானங்களையும் பொது மக்கள் பாவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்கள். இருந்தும் சிலர் தமது ஆத்ம திருப்தியை பெறுவதற்காக பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற்று திருவடிநிலை மயானத்துக்கு எவ்வளவோ சொலலொணாத் துயரங்களை அனுபவிதது தங்கள் கடமைகளை நிறைவேற்றுகின்றனர்.

தற்சமயம் மேற்கூறிய நடைமுறையையும் பாதுகாப்புப் படையினர் நிறுத்தியுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவவிடயம் சம்பந்தமாக தங்களுடைய அதிகாரங்களைப் பாவித்து ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம் என்று அமைச்சருக்கு அனுப்பி வைக்கபபட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



பருத்தித்துறையில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ரூபா 25 லட்சம் செலவில் கலாசாரமண்டபம் மற்றும் நூல் நிலையம் என்பவற்றை அமைத்து வருகின்றது.

இந்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்தி ஆச்சிரமத்துக்குச் சென்று கட்டடப் பணிகளைப் பார்வையிட்டார்.

இந்தியத் தூதரும் அவருடன் வந்திருந்த அதிகாரிகளும் கலாசார மண்டபம் அமைக்கப்படும் இடத்தில் ஆச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தாவைச் சந்தித்துப் பேசிய போது எடுக்கப்பட்ட படம் இது. (ம)

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் விளக்கமறியலில்

கொழும்பு,மார்ச்21

கண்டி கங்காவத்தை கோறளைப் பகுதிப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்து வயதுச் சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டின் பேரில் மெனிக்கின்ன பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி நீதிவான் அவரை 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணகளை மெனிக்கின்ன பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இரத்நாயக்க மேற்கொண்டு வருகிறார். (க-20)

### யாழ்.பல்கலையில் அஞ்சலிச் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்21

தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற "ராகிங்" கொடுமைகளால் தற்கொலை செய்துகொண்ட புகுமுக மாணவன் சமீரா சட்டுரங்கவுக்கு அஞ்சலி தெரிவித்து யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

"கொலைவெறி, காம இச்சை கொண்டு அலையும் "ராகிங்" அரக்கர்களின் பசிக்கு இரையான இன்னுமொரு உயிர்" என்ற சாராம்சத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகள் பகிடிவதை எதிர்ப்பு மாணவர்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன. (க-6)

### மருதடி உற்சவ காலத்தில் விசேட பஸ்சேவை

வலி.தென்மேற்கு,மார்ச்21

மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் விசேட பஸ் போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி முதல மருதடி விநாயகர் ஆலய திருவிழா ஆரம்பமாவதை முன்னிட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபை உற்சவ காலத்தில் 'பவுசர்' மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கும், சுகாதார வசதிகளை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

மேற்படி தீர்மானம் நேற்று முன்தினம் மருதடி விநாயகர் ஆலயத்தில்இடம்பெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-185)

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சு நடவடிக்கை

## இனி தொண்டர் ஆசிரியர் நியமனம் இல்லை

கொழும்பு,மார்ச்21

நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது குறித்த அறிவித்தல் இந்த மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என்று கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆசிரிய நியமனத்தின் போது பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இந்த முறை வழங்கப்படவுள்ள ஆசிரிய நியமனத்தின்போதே தொண்டர் ஆசிரியர்கள் குறித்து இறுதியாகக் கவனஞ்செலுத்தப்படும் எனவும் -

இனி வரும் காலங்களில் தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படமாட்டா என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அன்பு வாழ்வை தலையாய சட்டமாகக் கொண்டு வாழ்வோம்

**தவக்காலச் சிந்தனை** — **22 ஆம் நாள்**

'கடைப்பிடித்துப் போதிப்பவனே பெரியவன் எனப்படுவான்.'

உப 4:1,5-9
மத் 5:17-19

மனிதவாழ்வில் சட்டங்கள் ஏராளம். ஆனால் இச்சட்டங்களை கடைப்பிடிக்கின்றோமா எனப் பார்த்தால் சந்தேகமே.

ஏனென்றால் ஆயரில்லா ஆடுகள் போல் நாம் ஒவ்வொருவரும் அலைந்து திரிகின்றோம். நம் கால் போன போக்கில் வாழுகின்றோம். இது எம்மை ஒழுக்கக் கேடான நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் சமூகத்தில் தீமை மேலோங்கி வருகின்றது.

இன்று எமது சமூகத்தில் சட்டம் பேசுபவர் அனேகம் பேர். ஆனால் அவர்களில் எத்தனைபோ் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றார்கள். அடுத்தவன் சட்டத்தின்படி வாழவில்லை என சுட்டிக்காட்டி குறை கூறுகின்றோம். நாம் அதை உணர்வதில்லை.

எனவே எமது வாழ்வில் இறை சட்டங்களையோ மனித சட்டங்களையோ அனுசரிக்க முயல்வோம். இறைவன் என் அருகில் இருக்கின்றார். என்னில் இருக்கின்றார். என் அயலானில் இருக்கின்றார் என்பதை உணர்ந்து அன்பு வாழ்வை தலையாய சட்டமாகக் கொண்டு வாழ்வோம்.

- ஹா.மேசி சுஜந்தினி

# வாசகர் திருமுகம்

## எஞ்சியுள்ள உடைமைகளையும் அபகரித்துச் செல்லும் கூட்டம்!

கடந்த வருடம் யாழ் நகரக் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட திடீர் போர் நடவடிக்கையால் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு புறப்பட்டனர் அப்பகுதி மக்கள். இந்த இடப்பெயர்வால் பெருமளவு வீடுகள், சொத்துக்களை அவர்கள் இழக்க நேரிட்டது.

குறிப்பாக கொழும்புத்துறை, அரியாலை, இருபாலைப் பகுதி கிராமங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. பல்குழல், எறிகணை வீச்சினால் வாழ்விடங்கள், பொருள் பண்டங்கள் சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் போர் சற்றுத் தணிந்த பின் சில மாதங்களாக தம் இடங்களுக்குச் சென்று வர முடிகிறது. சில கிராமங்களில் மக்கள் குடியமர்ந்து இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை கொழும்புத்துறை புங்கன்குளம் வீதி தொடக்கம் நெடுங்குளம் வீதியை உள்ளடக்கிய பகுதிகளும், அரியாலையின் சில பகுதிகளும் இன்னும் குடியமர முடியாத நிலையில் உள்ளன.

இங்கே சேதமடைந்த வீடுகளில் எஞ்சியுள்ள கதவு, நிலை, கூரைப்பகுதிகள், பாதிக்கப்படாத வீடுகளின் கூரை சீற்றுகள், மரங்கள், நாளாந்தம் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவை நாளாந்தம் மாயமாய் மறைவது கண்டு மக்கள் அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றார்கள்.

பெறுமதிமிக்க பொருள்கள், நிழல் தரு மரங்கள் விறகுக்காக - அற்ப வருமானத்திற்காக இனந்தெரியாதோரால் சிதைக்கப்படுவது பெரும் மன வேதனைக்கு உரியதாகும்.

இத்தனைக்கும் இப்பகுதிகளுக்குள் அனுமதி இன்றி மக்களோ, வாகனமோ செல்ல முடியாது. அவ்வாறிருந்தும் அவை எவ்வழியால் வெளியே செல்கின்றன என்பது ஆச்சரியம். அண்மையிலும் பல வீடுகளின் கூரைச சீற்றுக்கள் காணாமல் போயுள்ளன என்று கூறப்படுகிறது.

இச்செயற்பாடுகள் எரிகின்ற வீட்டினிலே எண்ணெய் ஊற்றும் ஓர் இரக்கமற்ற செயலாகும். இந்நிலை தொடர்ந்தால் காலப்போக்கில் எஞ்சிய வீடுகளுக்கு வானம் தான் கூரையாகக் காட்சியளிக்கும்.

கஷடப்பட்டு இரத்த வியர்வை சிந்தி தம்மை ஒறுத்து கட்டி எழுப்பிய இல்லங்கள் இடிபாடுகளாய் - குடி இருக்க முடியாதனவாய் - நாளாந்தம் நலிவுற்று போவதை எவர்தான் தாங்கிக் கொள்வர்.

இவற்றை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்களும் அரச அதிகாரிகளும் கவனம் எடுப்பார்களா?

*கொழும்புத்துறை* - **எஸ்.யேசுதாஸ்**

## வீதிகளில் தார் காய போடப்படும் மண் தூசியால் சுகாதாரக் கேடுகள்

சென்ற எண்பதுகளின் நடுப்பகுதியில் நான் கண்டியில் இருந்த போது, கண்டி மாநகரசபையின் மேயர் 'மக்களுக்கு ஒரு வேண்டுகோள்' என ஒரு பிரசுரம் விநியோகித்தார்.

சிங்கள மக்கள் பிரேதங்களை மயானத்துக்குக் கொண்டு செல்லும் போது, பிரேத வாகனத்தின் பின்னே மணலைத் தூவித்தூவி வருவார்கள். மயானம் வரை மணல் தூவப்படும். இது ஒரு சமயச் சடங்காக நடைபெறுவது வழமை.

இதைச் சட்டத்தின் மூலம் தடைசெய்யாமல் வேண்டுகோளாக சிங்கள மக்களுக்கு விடுத்திருந்தார் மேயர்.

அவர் தெரிவித்திருந்த காரணம் -

வாகனங்கள் வேகமாகச் செல்லும் போது தூசி போலிருக்கும் இம்மணல், பாதசாரிகள், சைக்கிள் மற்றும் வாகனங்களில் செல்வோரின் நாசிகளில் விழுந்து சுவாசத் தொகுதி நோய்களுக்கும் கண்களில் விழுந்தால் கண் பாதிப்புக்கும் காரணமாகிவிடும். அதனால் இம்முறையைப் பின பற்ற வேண்டாம்.

இதுதான் அவரின் வேண்டுகோள்.

புத்த சமய மக்களே இப்பழக்கத்தை உடையவர்கள். மேயரும் புத்த சமயத்தவரே. ஆயினும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை உணர்ந்து இதைத் தடை செய்ய நடவடிக்கை எடுத்தார்.

குடாநாட்டில் இப்போது பல வீதிகள் திருத்தப்படுகின்றன சூடான தார காய்வதற்கு மண்போடப்படுகிறது. ஆனால் தார் போட்டது தெரியாமல் இருப்பதற்குப் போடப்பட்டது போல் தேவைக்கு அதிகமாகப் போடப்படுகிறது.

யாழ்வைத்தியசாலையில் மூன்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் கண் பழுதடைந்ததால், கண் மாற்று சத்திர சிகிச்சை செய்வதற்காகக் கொழும்புக்கும், இந்தியா அப்பலோ வைத்தியசாலைக்கும் அனுப்பட்டுள்ளனர். ஆஸ்துமா நோயால் அவதிப்படும் பெரியவர்களும், சுவாச நோய் காரணமாகப் பெரியவர்களும் சிறுவர்களும் பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகிறார்கள்.

இவற்றுக்குக் காரணம் வீதிகளில் போடப்பட்ட மண் மக்கி தூசியே ஆகும்.

கண்டி மேயர் சிறு துளி மணலுக்கு எடுத்த நடவடிக்கையை எமது யாழ் மாநகரசபை மேயரும் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்படும் மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

அதேவேளை வீதி திருத்துவோரும் மணல் போட்ட சில தினங்களில் ஒதுக்கி அகற்றினால் நல்லது.

எமது மக்கள் சுகதேகியாக நல்வாழ்வு வாழ வேண்டும் என்னும் பெரு விருப்பத்தில் இவ்வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

*நல்லூர்.* - **க.நடராஜா.**

## யாழ். நகரில் இருந்து அராலிக்கு 'ஆமை வேகத்தில்' வந்த கடிதம்

அராலி வடக்கில் இருந்து அனுப்பப்பட்ட தபால் ஒரு மாதம் கடந்து 'ஆமை வேகத்தில்' யாழ்ப்பாணம் நாவலர் வீதிக்கு வந்துள்ளது. இதன் மர்மம் தான் என்ன?

கடந்த 08-01-2001 இல் நான் எனது சகோதரனுக்கு கடிதம் போட்டேன். அந்தக் கடிதமே சரியாக ஒரு மாதத்தின் பின்னர் 09-02-2001 இல் அவரது யாழ்.நாவலர் வீதி முகவரிக்குச் சென்றடைந்துள்ளது.

எனது சகோதரர் பதில் கடிதத்தை மறுநாள் 10-02-2001 இல் போட்டுள்ளார். அந்தக் கடிதமும் அதே போன்று 34 தினங்களுக்குப் பின்னர் (16-03-2001) எனது கைக்குக் கிட்டியது.

அதில் ஓர் ஆச்சரியம். அந்தக் கடிதத்தின் உறையில் 15-03-2001 திகதியிட்ட யாழ்.தபால் அலுவலக முத்திரையே பொறிக்கப்பட்டிருந்தது.

அப்படி என்றால் ஒரு மாத காலமாக அந்தக் கடிதம் எங்கே உறங்கியது?

அவசிய, அவசர விடயங்களுக்கு தபால்கங்களை எப்படி நம்புவது?

*அராலி வடக்கு.* - **எஸ்.ஆர்.அருமைநாயகம்.**

# புலிகள் கடந்த ஆண்டில் மட்டும் 15 விமானங்களை சுட்டு வீழ்த்தினர்!

## நாடாளுமன்றில் பிரதியமைச்சர் பீலிக்ஸ்

கொழும்பு,மார்ச்21

கடந்த ஆண்டு மாத்திரம் 15 விமானங்கள் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்த எரிபொருள், மின்சக்தி பிரதி அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, படையை வலுப்படுத்த 50 நவீன விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறினார்.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்ட விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காக இராணுவத்துக்கு நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை அமைக்கப்படுவது தொடர்பாக எதிரணியினர் பல விமர்சனங்களையும், கணக்குகளையும் கூறுகின்றனர். தியவதன ஓயா தண்ணீரையும் அவர்கள் தமது கணக்கில் சேர்த்துள்ளனர் போன்று தோன்றுகின்றது.

### தயாரட்ண எம்.பி.

திகாமடுல்ல மாவட்ட ஐ.தே.க. எம்.பி. பி.தயாரட்ண தமது உரையில் தெரிவித்ததாவது:-

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாயின், புலிகளுடன் பேச வேண்டும். புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது ஆனால் அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படுவதுடன் நின்றுவிடாமல் தமது ஆட்சிக்காலத்தை நீடிக்கும் யோசனையை அரசு முன்வைத்தது. அதனாலேயே ஐ.தே.க. புதிய அரசமைப்புத் திட்டத்தை எதிர்த்தது.

யுத்தத்தால் மாத்திரம் பொருளாதாரம் சீர்கெடவில்லை. வேறு பல காரணங்களும் உள்ளன. மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து விட்டது. மின்கட்டண அதிகரிப்பால் கட்டணங்கள் செலுத்தப்படாமல் மின்சாரம் துண்டிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில் அதிக இடங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுப்பதில் என்ன பயன் உள்ளது?

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. தினமும் ஏலத்தில் சொத்துக்கள் விற்கப்படும் சம்பவங்கள் விளம்பரங்களாக வெளிவருகின்றன. மக்களின் சேமிப்புகள் குறைவடைந்துள்ளன. அடகு வைத்தல் அதிகரித்துள்ளது - என்றார். (க)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்21

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தினர் நடத்தும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி எதிர்வரும் ஏழாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. (க-ரி)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் அலுவலகம் மற்றும் செயற்பாட்டறை ஆகியவற்றின் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் வி.என்.விஜயகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் கலந்துகொள்வார். (க-10)


## நிக்சன் அதிர்ஷ்ட முதலீட்டுத் திட்டம்

நண்பர்களுக்கு மட்டும்

மாதாந்தக் கட்டுப் பணம் ரூபா 500/=. மாதம் மாதம் 15 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
முதலாவது அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 25000/= உடன் வழங்கப்படும்.
அதிர்ஷ்டத்தின் பின்னர் பணம் கட்டத் தேவையில்லை.
மேலும் (இலவசமாக) 25 பேருக்கு சிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
எதிர்வரும் 25.03.2001ஆம் திகதிக்கு முன்பு பணத்தைக் கட்டிப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**நிக்சன் பல்பொருள் வாணிபம்**

(பஸ்நிலையம் முன்பாக)
அச்சுவேலி. (C/15772)


## முதல் திங்கள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 1932 - 11 - 27



உதிர்வு 2001 - 02 - 20

நெடுந்தீவு மேற்கு 5 ஆம் வட்டாரம்

### திருமதி தையல்முத்து குமாரசுவாமி

மனை அறத்தின் வேராக நின்று
மாண்பு தந்த தெய்வமே!
இனியவளே எம் தாயே!!
இனிக் காண்பது எங்கே?


கடந்த 2001-02-20 அன்று சிவபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தை நினைவு கூருவதுடன் *நாளை (2001-03-22) வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு* எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணத்திலும், நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மே/பா, டாக்டர் பொ.பரமலிங்கம்,*
*நீதிராஜா வீதி,*
*கொக்குவில் மேற்கு.* (85647)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 04 - 1943



மறைவு 16 - 03 - 1996

### அமரர் சங்கரப்பிள்ளை இராஜலிங்கம்

திதி: 21-03-2001

அப்பா!
ஆண்டுகள் ஐந்தில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*2/2,முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

-குடும்பத்தினர் (85652)


## G.T.Z. யாழ்.புனரமைப்புத் திட்டம்

gtz

### கூறுவிலை கோரல்

எமது நிறுவனத்தினால் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவிருக்கும் வீடுகள் புனரமைப்புத் திட்டத்துக்கு வழங்கப்படுவதற்கு கல், மண், சல்லி, சிமெந்து, கம்பி வகைகள் உட்பட ஏனைய கட்டடப் பொருள்கள் சம்பந்தமாக விநியோகத்தவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் *இல.11, கண்டி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் பெற்று *30.03.2001 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு முன்பு* கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

G.T.Z. (85654) - பிரதம இணைப்பாளர்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 05 - 1917



மறைவு 13 - 04 - 1999

### அமரர் சின்னத்தம்பி வீரகத்தி

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: துவாதசி (21-03-2001)

அன்பை ஊட்டி அறிவை வளர்த்து
அவனி போற்ற எமை வாழவைத்த
அன்புத் தந்தையே!

என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கிழவிதோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (85623)

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## IT NET COMMUNICATION & NETCAFE

வெளிநாட்டு இணைப்புத் தொலைபேசி அழைப்புக்கள் குறைந்த விலையில்!

- ஒரு வருட அனுபவ சேவை
- ISDN 128 Kb, Speed Line சேவை
- 10 செக்கன்களில் தொடர்பு இணைக்கப்படும்.

மிகவும் துல்லியமான அழைப்புக்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்.

T.P. 466752, 466952, 466718, 466918, 384586

**183, Sea Street, Colombo - 11** (85596)


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 8ஆம் நாள் இன்று (21.03.2001) புதன்கிழமை காலை 6.18 மணி முதல் 7.32 மணியளவில் வரும் திருவோண நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப முகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவரீதன் (லண்டன்)**
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**தமயந்தி**
அவர்களுக்கும்

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமணம் செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீ நாராயணனின் திருவருள் பாலித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை வாழ்த்தி அருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மணமகன், மணமகள் இல்லங்களில் மதியபோசன உபசரிப்பு இடம்பெறும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி சங்கரப்பிள்ளை**
(உரிமை:சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்)
*209, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**திரு.திருமதி பாலசுப்பிரமணியம்**
(உரிமை:ஜெயகிருஷ்ணா நகை மாளிகை)
*336/24, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(85660) (இருவீட்டார் அழைப்பு)

# வடமராட்சி துன்னாலை வடக்கு வல்லியானந்தம்

# அருள்மிகு ஆயில் நின்றொல்லை விநாயகர் ஆலய

# புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேக சிறப்பிதழ் 21.03.2001

## ஆலயப் பிரதம குருவின் ஆசிச்செய்தி

எமது ஆன்ம ஈடேற்றத்துக்காக நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவது இன்றியமையாதது ஆகும். இதன் பொருட்டு எமது முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து வழிபட்டார்கள். இந்த ஆலயங்களை அழிய விடாது காலத்திற்குக் காலம் புனரமைத்து 12 வருடங்களுக்கு ஒரு முறை குடமுழுக்குச் செய்ய வேண்டும். அதாவது கும்பாபிஷேகம் நிகழ்த்த வேண்டும் என ஆகமம் கூறுகிறது. அதன் பிரகாரம் எமது ஆயில் நின்றொல்லை விநாயகர் ஆலயமும் புனருத்தாரணம் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு எல்லாம்வல்ல வல்லியானந்த விநாயகர் திருவருள் கைகூடியுள்ளது. அது மட்டுமன்றி எனது பரம்பரையினர் செய்த பணியை நானும் செய்ய எல்லாம் வல்ல வல்லியானந்த விநாயகர் வழிதந் துள்ளார். எனவே இக்கும்பாபிஷேக விழாவானது சிறப்புற எல்லாம் வல்ல வல்லியானந்தனை வணங்கி, ஊர்மக்களும், உலக மக்களும் நன்மைபெற்று, இன்புற்றிருக்க வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

"எல்லோரும் இறையருள் பெறுவோமாக"

**அருணாசல ஐயர் சிவராசசர்மா**
*ஆலயப் பிரதமகுரு*


## திருப்பணிச் சபைத் தலைவரின் வாழ்த்துரை

வழிபடும் அடியார்களின் இன்னல்களையும் இடர்களையும் நீக்கி அருள்புரியும் பொருட்டு சகல வளங்களும் பொருந்திய துன்னாலை நகரின்கண்ணே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள வல்லியானந்தப் பிள்ளையாருக்கு ஆலயம் அமைக்கும் பொறுப்பை, எனது தந்தையார் கதிர்காமர் உலகநாதரின் காலத்தின் பின் தற்போது புனருத்தாரணம் செய்ய நம்பிக்கையின் பொருட்டு எம்மிடம் ஒப்படைத்தார்கள் இவ்வூர் மக்கள். அந்த நம்பிக்கைக்கு விசுவாசமாக நிர்வாக சபையினரின் உதவியுடனும் திருப்பணிச் சபையின் ஆதரவுடனும் அடியார்களின் ஒத்தாசையுடனும் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பெற்றது.

இப்புனித கைங்கரியம் இனிதே நிறைவுற அருள் செய்து இன்று கும்பாபிஷேகம் காணும் பிள்ளையாரின் திருவருளை வியக்காமலிருக்க முடியாது.

இந்த ஆலயத்தை அமைத்த முன்னோர்க்கும் தற்சமயம் ஆலய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்து வருபவர்களுக்கும் இனி வருங்காலத்தில் தொண்டு செய்ய இருப்பவர்களுக்கும் வல்லியானந்தப் பிள்ளையாரின் திருவருட் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**திரு.உ. பாலசுப்பிரமணியம்**
*திருப்பணிச்சபை.*
*நிர்வாகசபைத் தலைவரும்*
*உத்தரவு பெற்ற நில அளவையாளரும்*



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

**கும்பாபிஷேக விவரம்**

| | | | |
|---|---|---|---|
| காலை | 06.00 மணி | - | தூபி அபிஷேகம் |
| காலை | 07.30 மணி | - | கும்பாபிஷேகம் |
| காலை | 10.00 மணி | - | மகா அபிஷேகம் |
| காலை | 12.00 மணி | - | அன்னதானம் |
| மாலை | 5.00 மணி | - | விநாயகர் வீதியுலா |

### *ஓங்கார முதற்பொருளே! வினை தீர்க்கும் விநாயகனே!!*

ஓம் என்ற பிரணவத்தில் இருந்து வேதங்கள் தோன்றின. அப்பிரணவமே எல்லாத் தேவதைகளுக்கும் பிறப்பிடம்.
உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் பிரணவ மந்திரமே காரணமாகும்.
பிரணவ சொரூபமாகத் திகழ்பவர் விநாயகர்.
இத்தகைய வித்தக விநாயகரின் உருவமும் பெரிது!
அவருடைய மகிமையும் பெரிது!
அவர் புரியும் கருணையும் பெரிது!
மேலாக மூலாதார மூர்த்தி முழுமுதற்பொருள் விநாயகர்!
அவரை வழிபட்டால் எல்லாக் காரியங்களும் எளிதில் முடியும்!
அவர் கருணைக்கடல்; கிருபாநிதி! தயானந்தம்!
தன்னை வணங்கினவர்க்கு விக்கினத்தை நீக்குபவர்!
தனக்கு மேல் நாயகர் இல்லாதவரும் விநாயகரே!

## திருப்பணிச் சபை பொருளாளரின் வாழ்த்துரை

இன்று நடைபெறும் வடமராட்சி துன்னாலை வடக்கு அருள்மிகு ஆயில் நின்றொல்லை(வல்லியானந்தம்) விநாயகர் ஆலய கும்பாபிஷேக விழா இனிதே நிறைவுற எல்லாம் வல்ல கணபதியை இறைஞ்சுகின்றோம்.

இந்த ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் புனர் நிர்மாணம் செய்ய நிதி உதவியை வாரி வழங்கிய அடியார்களுக்கெல்லாம் என்றும் நலம் அருள விநாயகப் பெருமானை வேண்டி இன்றும் என்றும் நன்றி கூறத் திருப்பணிச் சபை கடமைப்பட்டுள்ளது.

**செ.கமலநாதன்,**
*சாலை முகாமையாளர்,*
*வடபிராந்திய போக்கு வரத்துச்சபை, யாழ்ப்பாணம்.*

## கும்பாபிஷேகப் பிரதம குருவின் அருளாசி

நித்தியமும் துதிசெய்யும் அடியவர்கள் துயர் நீக்கி அருள் பாலித்து வரும் ஸ்ரீவல்லியானந்தப் பதியுறை விநாயகப் பெருமானுக்கு ஆலய பரிபாலனசபையினரும் அடியார்களும் செய்த பெருமுயற்சியினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நிகழ்வது அனைவருக்கும் நன்மை தருவதாகும். இப்பணிசிறக்க முன்னின்றோர் அனைவருக்கும், பொருளுதவி புரிந்த அடியார்களுக்கும் ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருள் கிடைக்கவேண்டும் என ஆசீர்வதிக்கிறோம்.

**'சிவாகம கலாநிதி' சிவஸ்ரீ.நா.சர்வேஸ்வரக் குருக்கள்**
***ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.***

## நன்றி நவிலல்

சைவமதம் சீலமொடு தமிழு மோங்கிச்
சால்புறவே பக்திவளர் வடமராட்சி
துய்யபதி துன்னாலை வடபால் மேவும்
துதிக்கையின் ஆயின்நின்றொல்லை வளர்
வையகவல் லியானந்தப் பிள்ளை யாரின்
வண்ணமிகு ஆலயக்கும்பாபி ஷேகம்
இயன்விநா யகனருளால் நிறைந்ததின்றே?
இங்கரனாம் விநாயகனின் பதம் பணிந்தேன்

முந்தையரும் ஆதரித்துப் போற்றி வந்த
மூஷிகத்து வாகனராம் பிள்ளை யாரும்
எந்தைவல்லி புரமவர்கள் ஆத ரித்தே
எழிற்கோவி லாக்கிப் பெரும் தொண்டுசெய்தார்
தந்தைசெய்த திருப்பணியைத் தனயன் செய்யத்
தந்திமுகன் எனக்கருளை நல்கினானே!
அந்தத்திருப் பணிச் சபையா ரோடு இந்த
ஆலயநிர் வாகசபை யோர்க்கும் நன்றி.

சேவையே இலஷியமாய்க் கொண்ட நல்லூர்
றாலின்ஸ் நிறுவனத்தார் செய்த பெரும்
சேவைக்குக் கைமாறு என்ன செய்வேன்?
செய்நன்றி மறவாமல் நன்றி சொல்வேன்.
தேவையறிந் தெம்கோயில் முன்னே றிடத்
திருப்பணிகள் செய்தார்க்கும் நன்றி சொல்வேன்
பூவைத்துத் திருப்பணிகள் செய்தோ ருக்கும்
பொன்தந்து பணிசெய்தோர் களுக்கும் நன்றி!

பிரதிஷ்டா குருசர்வேஸ் வரக்கு ருக்கள்
பிரதம சாதகர்பங் குசர் மாவும்
பிரம்மஸ்ரீ சிவராச சர்மா என்னும்
பிள்ளையார் ஆலயக் குருவான வர்க்கும்
கரம்கூப்பி என்நன்றி தெரிவிக் கின்றேன்
கணபதியின் பக்தருக்கும் தொண்ட ருக்கும்
சிரம்தாழ்த்தி என்வணக்கம் கூறி டுவேன்
சிறப்புறவை த்தோருக்கும் எந்தன் நன்றி

துன்னாலை ஆயில் நின்றொல்லைக் கோயில்
துலங்கிடவே வல்லிபுரம் தொண்டு செய்தார்
இன்னாளில் இலங்கு திருப் பணிகள் செய்ய
இனிய புனர் நிர்மாணக் குடமுழுக்கு
நன்னாளைக் கொண்டாடும் விழாவின் சபை
நற்செயலாளர் ஆக்குவிநா யகர்க்கும்
பொன்னாளாம் குடமுழுக்கு விழாவின்போது
பிள்ளையார் அருள்பெற் றோர்களுக்கும் நன்றி.

**திரு. வல்லிபுரம் சிவாநந்த விக்னேஸ்வரன்**
*செயலாளர், புன்னாலை வடக்கு ஆயில் நின்றொல்லை*
*(வல்லியானந்த) பிள்ளையார்,*
*ஆலய புனர்நிர்மாண கும்பாபிஷேக சபை*

(C/15800)

## தப்பியோடிய சிப்பாய் சுட்டுப் பொதுமகன் காயம்

திருகோணமலை அரசமலை இராணுவ முகாமிலிருந்து ரி-56 ரகத் துப்பாக்கியுடன் தப்பியோடிய சிப்பாய் ஒருவர் புல்மோட்டைப் பகுதியில் பொதுமகன் ஒருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் புல்மோட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் தேடுதல் நடத்தி கைது செய்யப்பட்ட அந்தச் சிப்பாய் துப்பாக்கியுடன் புல்மோட்டைப் பொலீஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கப்பட்டார். இவர் கடந்த 17 ஆம் திகதி முகாமை விட்டுத் தப்பியோடினார் என்று தெரிவிக்கப்பட்டது.

(க)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு தொலைபேசி

வலி.தென்மேற்கு,மார்ச்21

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்கு தொலைபேசி இணைப்பு வழங்குவதற்கு ரெலிக்கொம் நிறுவன யாழ்.பிராந்திய முகாமையாளர் அன்ரன் ராஜன் நடவடிக்கை எடுத்துள்ளார். எனத் தெரி விக்கப்பட்டது.

(க-185)


## நாடு நலம் பெற நாயகியைச் சரண் புகுவோம்



கும்பத்தின் நாயகியாய் குறையாவும் தீர்த்தருள்வாள்
நம்பினவர் பக்கத்தில் நாளும் துணையிருப்பாள்
சிம்மத்தின் மீதமர்ந்து சேரும் பகை முடிப்பாள்
இம்மண்ணின் நலம் காத்து எங்கும் வாழ்ந்திருப்பாள்
-மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

*இன்று காரைநகர் திருமணற்காடு அருள்மிகு கும்பநாயகி அம்பாளின்*
12ஆம் நாள் மஹோற்சவ தினம் (வேட்டைத்திருவிழா) விழாவில்
நாடு நலம்பெற அம்பிகையைப் பிரார்த்திப்பவர்கள்:
அன்பர் திரு. செ.சிவானந்தன்
**"பராசக்தி அச்சகம்"** கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

(C/15800)


## நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 'சிறீலங்கா எயர் லைன்ஸ்'

கொழும்பு,மார்ச்20

'சிறீலங்கன் எயர் லைன்ஸ்' நிறுவனம் பெரும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பன்னிரண்டு மாதங்களாகத் தமது நிறுவனம் மோசமான நிதிநெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருவதாகவும், விமான உதிரிப்பாகங்கள், எஞ்சின்கள் ஆகியவற்றை விற்றே இந்த நிலையைச சமாளிக்க வேணடி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரச வங்கிகளில் தொழிற்படு மூலதனக் கடன் பெறப்பட்டு அதன் மூலமே நிறுவனத்தைத் தேற்றிவரக் கூடியதாயுள்ளது என்றும் உல்லாசப் பயணிகளின் வருகையும் நாட்டின் நிலைமையைக் காரணங்காட்டி வரவரக் குறைந்து கொண்டே செல்வதால் நிறுவனத்தின் 'ஆயுள்' தொடர்பாகச் சந்தேகம் எழுகிறது என்றும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## குவைத்திலிருந்து திரும்பி வந்த 75 பணிப் பெண்கள்!

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று குவைத் சென்ற இலங்கைப் பணிப்பெண்களில் 75 பேர் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கொழும்புக்குத் திரும்பினர்.

கட்டார் விமானநிலையத்திலிருந்து புறப்பட்டு கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலையத்தை நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் அவர்கள் வந்தடைந்தனர்.

இந்தப் பணிப்பெண்களுக்கு எந்த விதமான ஊதியமும் தொழில்கொள்வோரால் வழங்கப்படவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளது. (க-7)

# UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for Civil Engineering works or from Multi purpose Co-Operative Societies for the Aluminium Partition and related works at University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 03-04-2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.

1. Non-refundable deposit Rs. 500/=
2. Refundable deposit Rs. 2500/=

Perfacted tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 10.04.2001 at 10.00 A.M.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Maintenance Branch of this University during office hours if necessary.

*Registrar,*
*University of Jaffna.* C/15753

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna.



## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

1. பற் சிகிச்சை நிலையம் நிர்மாணித்தல், வேலணை வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையினரால், 2001ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணி வரை யாழ்ப்பாணம், பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தல் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் 'இக்ராட' (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-9 இலும் அதற்கு மேல் பதிவு செயயப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம், சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். மீளளிக்கப்படும் வைப்புப்பணம் ரூபா 10,000 ஐயும் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 500 ஐயும் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச் சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03ஆம் திகதி பிற்பகல் 4.45 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
19.03.2001

-பிரதம பொறியியலாளர்.

(C/15799)


## நெல் கொள்வனவு

சண்டிலிப்பாய்,மார்ச்21

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்டு வரும் நெல்லை கொள்வனவு செய்வது என்று தீர்மானித்துள்ளது.

500-1 இன நெல் மற்றும் 400-2 இனநெல் ஆகியவற்றை மூடை (70 கிலோ) ஒன்றை ஆயிரத்து நாநூறு ரூபாவாகவும், ஏனைய நெல் இனங்களை மூடை ஒன்றை ஆயிரத்து இருநூறு ரூபாவாகவும் கொள் வனவு செய்வது என்று சங்கம் தீர் மானித்துள்ளதாக சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (3-135)

## பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம்

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொட்டடியிலுள்ள கட்டடம் ஒன்றில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் கே.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இக கூட்டத்தில் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (3-135)

## மெய்வன்மைப் போட்டி

மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயமும், மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சென்.ஜோசப் மகா வித்தியாலய அதிபர் கா.அழகரத்தினம் தலைமையில் நடைபெறும் இப் போட்டியில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். (3-135)

## கிளைதிறப்பு

கோப்பாய்,மார்ச்21

கைதடியில் மீள குடியமர்ந்த மக்களுக்கு சேவையை வழங்க வசதியாக கைதடி ப.நோ.கூ. சங்கம் கிளை ஒன்றை கைதடி மத்தியில் கடந்த வாரத்தில் திறந்துள்ளது. (3-72)

## ஆலயம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,மார்ச்21

மாதகல் வடக்கு பேச்சியம்மன் ஆலயம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினரால் புனரமைப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடியார்கள் வழங்கும் நிதி உதவியைக் கொண்டு இப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமி தெரிவித்தார். (3-135)

## பொதுசன உதவி கொடுப்பனவு

பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு கடந்த வியாழன் முதல் கோப்பாய் தபாலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. குறித்த தினத்திலிருந்து 10 நாள்களுள் குறித்த கொடுப்பனவுகளை பெறுவோரை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (3-72)

## செய்தியாளர் தடை, தணிக்கையால்

# யுத்தத்தின் உண்மை நிலை என்ன என்பதை அறியமுடியவில்லை

## நியூயோர்க் 'மீடியா வாச் டோக்'தகவல்

இலங்கையில் கடந்த 17 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் யுத்தத்தின் உண்மை நிலையை அறியமுடியவில்லை. வடக்கு - கிழக்கே செய்தியாளர் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையும், செய்தித் தணிக்கையுமே இதற்குக் காரணம்.

நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்ட 'மீடியா வாச் டோக்' என்ற அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'கடந்த ஆண்டு இடம்பெற்ற செய்தியாளர்கள் மீதான தாக்குதல்கள்' என்ற தலைப்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படிக் கூறப்பட்டுள்ளது.

வடக்கில் கடந்த வருடம் செய்தியாளர் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் மயிரிழையில் தப்பியுள்ளார். செய்தியாளர்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன -

என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-3)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 04 - 1932



இறப்பு 21 - 03 - 1999

அமரர்
### யோசவ் விக்ரர் இம்மானுவேல் (J.P)

(மரணவிசாரணை அதிகாரி, ஓய்வு பெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

இறைவன்
"தமது திட்டப்படி யாரை முன்குறித்தாரோ
அவரை அழைத்திருக்கிறார்!
யாரை அழைத்தாரோ
அவரை தமக்கு ஏற்புடையவராக்கினார்!
யாரைத் தமக்கு ஏற்புடையவராக்கினாரோ
அவருக்குத் தமது மாட்சிமையில் பங்கு தந்தார்."

ரோமர் 8:30

*இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கும்*

*நாரந்தனை மேற்கு,*
*ஊர்காவற்றுறை.* (85382) - குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 16 - 02 - 1935



இறப்பு 19 - 02 - 2001

### அமரர் பொன்னு கந்தசாமி

குடும்பம் காக்கும் தலைவனாகி
அன்புக்கோர் தந்தையாகி பாசத்திற்கோர் பேரனாகி
நம் வாழ்வுக்கு வழி காட்டி நல்லறிவு புகட்டினாய்
உற்றார் உறவினருக்கு உதவிகள் செய்து
ஊரார் போற்றும் தலைவனானாய் எம் இனிய தலைவனே!
நீர் எமை விட்டு எங்கு சென்றீர்?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்!*

**அமரர் பொன்னு கந்தசாமி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-03-2001) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*காந்திஜீ வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

85612



உ
## விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!
மங்களகரமான நிகழும் விக்கிரம வருஷம் பங்குனித் திங்கள் 9ஆம் நாள் (22-03-2001) வியாழக்கிழமை அவிட்ட நட்சத்திரமும் திரயோதசி திதியும் சித்தயோகமும் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 11 மணி 30 நிமிடம் முதல் 12 மணி 15 நிமிடம் வரையிலான சுக்கிர ஓரையுடன் கூடிய மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**மாதினி**
அவர்களை



எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சபாநாத சர்மா**
(ஆசிரியர் - சுழிபுரம் ஆறுமுக வித்தியாலயம்)
அவர்களுக்கு

கன்னிகாதான, பாணிக்ரஹண, திருமாங்கல்யதாரணம் மணமகள் இல்லத்தில் சிவன் சிவகாமி அம்மையின் அனுக்கிரகத்துடன் நடைபெற பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் மேற்படி முகூர்த்தத்தில் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரபந்து சகிதம், குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்தனம்:-மணமகன் இல்லத்தில் 22-03-2001 அன்று காலை 6.17 மணிக்கு மேல் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீ.ஸ்ரீமதி ஞானசபாரத்தின சர்மா
*சிவன்கோயில், சித்தன்கேணி.*

ஸ்ரீமதி, வா.சண்முகசுந்தர சர்மா,
*குடியிருப்பு, சுழிபுரம்.*

(85629)

# கலைஞர்கள் மத்தியில் புரிந்துணர்வு; நாடக வளர்ச்சிக்கு இது மிக அவசியம்

நல்ல நாடக வளர்ச்சிக்குக் கலைஞர்கள் மத்தியில் பரஸ்பரம்-புரிந்துணர்வு ஆழமாய் வேரூன்றவேண்டும். போட்டியும் பொறாமையும் களைபட்டவேண்டும். அத்துடன் வித்துவக் காய்ச்சல் விஷம் என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

"பண்பான பிரஜைகளை உருவாக்குவது கல்வியின் நோக்கங்களில் ஒன்று. எனவே பாடசாலையை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் நாடகஙகள் மாணவர்களின் உளவளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்தாத வகையில் அமைய வேணடும்.

"இன்றைய பிரச்சினைகளை முறையாக நாடக உருவில் காட்டுவதற்கு சரித்திர நாடகங்கள் ஈடுகொடுப்பதாய் இல்லை. பரந்து விரிந்து பல்வேறு பிரச்சினைகளையும் தொட வல்ல சக்தி சமூக நாடகங்களுக்கே உண்டு. எனவே இன்றைய தேவை முறையாக உருவாக்கப்பட்ட சமூக நாடகங்களே."

இப்படிக் கூறுகிறார் ஈழத்தின் நாடகக் கலைஞர்களில் ஒருவரான ஏ.ரி.பி. என சுருக்கமாக அழைக்கப்படும் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை.

ஈழத்தின் குறிப்பாகக் குடாநாட்டின் நாடக வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களில் (இன்று எம் மத்தியில் வாழ்பவர்களில்) மூத்தவர் ஏ.ரி.பொன்னுத்துரை.



தனது குருநாதர் 'சானா'வுடன் (சண்முகநாதன்) ஏ.ரி.பி. (கண்ணாடி அணிந்து காணப்படுகிறார்)

'கலைப்பூமி' எனப் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் புகழப்பட்ட பிரதேசம் குரும்பசிட்டி. இத்தகைய பெருமை வாய்ந்த இடமே கலைப் பேரரசின் பிறபபிடம் - வாழ்விடம்.

ஈழத்தின் நாடக வளர்ச்சியில் தனக்கெனத் தனியிடம் வகிக்கும் ஏ.ரி.பொனனுத்துரை சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், இயக்குநர், தயாரிப்பாளர், நடுவர், திறனாய்வாளர், இலக்கிய ரசிகர், நாடகரசிகர்.

சமூக நாடகங்கள், வானொலி நாடகங்கள் என சுமார் 50 நாடகங்களை எழுதியும், நடித்தும் நாடக வளர்ச்சியில் தனியிடம் பதித்த இவர் வயது முதிர்ந்த நிலையிலும் நாடகத்துக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார்.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை தனது நாடக வளர்ச்சியின் பல்வேறு கால கட்டங்கள் பற்றியும், நாடக அனுபவங்கள் பற்றியும் 'கலைச்சுடர்' பகுதிக்கு நீண்டதொரு செவ்வியை வழங்கியுள்ளார்.

❋ *கேள்வி:-* நாடகத்துறையைத் தாங்கள் விரும்பித் தெரிவு செய்யக் காரணம் என்ன?

நாடக வளர்ச்சியில் தங்களுக்கு உரமூட்டியவர்கள் யாவர்?

சூழ்நிலை என்ன?

✦ *பதில்:-* கலைஞன் ஒருவனது வளர்ச்சியில் அவனுக்குக் கிடைக்கும் கலைச்சூழல் பிரதானமான இடத்தைப் பெறுகின்றது. குரும்பசிட்டி மண்ணின் மூத்த நாடகக் கலைஞர்கள் பலரும் எனக்கு நாடகத் துறையில் ஆலோசனைகளை வழங்கி, எனது உத்வேகத்துக்கு உரம்தந்தனர்.

எனினும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் நான் கல்வி கற்ற காலப்பகுதியே என்னை முழுமையான நாடகக் கலைஞனாக மாற வழிசமைத்தது.

பரமேஸ்வராக் கல்லூரியின் மூத்த சித்திர ஆசிரியரும், சிறந்த நடிகருமான 'சானா' (சண்முகநாதன்) எனது கலைவளர்ச்சியில் தூணாக நின்று செயறபட்டவர். 1950 ஆம் ஆண்டு பிரான்சிய நாடகமான ('மைசா' லோபியின் காதல்) சானாவின் நெறிப்படுத்தலில் பரமேஸ்வராக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது.

இந்த நாடகத்தில் பிரதான பாத்திரம் (லோபி) ஏற்று நான் நடித்தேன். சிறந்த வழிகாட்டுதல்களும், சூழ்நிலையும் கிடைக்கப் பெற்றால் கலைதானாகவே வளரும் என்பதற்கு பரமேஸ்வராக் கல்லூரியின் அடித்தளம் எனக்கு உறுதுணையாக அமைந்தது.



'லோபியின் காதல' நாடகத்தில் ஏ.ரி.பி.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி தமிழும், சைவமும், தமிழர் கலைகளும் ஒருங்கு சேர்ந்து வளர்ந்த ஒரு பெரிய பண்பாட்டு நிறுவனம். அந்த நிறுவனமே என்னையும், மூத்த அறிஞர்களையும், கலைஞர்களையும் ஈழமணணுக்கு கொடையாக வளங்கியது என்றால் மிகையில்லை.

சென்னை கிறீஸ்தவக் கல்லூரியில் நான் பட்டப் படிப்பை மேற்கொண்ட காலத்தில் ஐரோப்பியக் கலைஞர்களின் கலை ஆர்வத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. நாடக வல்லுநர்கள் பலரையும் முகிழ்த்த கல்லூரி இது.

## செவ்வி: ஆனந்தன்

ஐரோப்பிய விரிவுரையாளர்களான (ஆங்கில இலக்கியம்) மகனிக்கல், மக்செயில் ஆகியோர் ஐரோபபிய நாடகங்கள் பற்றிய விளக்கங்களை எனக்கு வழங்கியிருந்தனர்.

*(செவ்வியின் மிகுதிப் பகுதி அடுத்த கலைச்சுடரில்)*

(செவ்வியின் மிகுதிப் பகுதி அடுத்த கலைச்சுடரில்)

## கலைச்சுடர்

தயாரிப்பு:-நர்த்தகன்

# ஆற்றுகையின் ஆளுமையை மாணவரிடையே விருத்தி செய்ய உதவிய நாடகப்பட்டறை

பல்வேறுபட்ட படி நிலைகளைச் சந்தித்து வரும் எமது சமுதாயம் தனது நடவடிக்கைகளை காலப் போக்கின் வேகமான பாதச்சுவடுகளுக்கேற்ப மாற்றியமைத்து செல்கின்ற தன்மையைத் தற்போது நாம் தெளிவாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



நாடகப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுடன் யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள்.

ஒரு சமூகத்தின் குறை நிறைகளை ஒவ்வொரு சமூகப் பிரஜையும் அறிந்திருப்பது அவசியமான தொன்று. இன்றைய காலச்சூழலின் பின்னணியில் ஒரு மனிதன் அவற்றை அறிந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. இவ வாறான சில நடைமுறைப் பிரச்சினைகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூற பல்வேறு கோணங்களில் பல அணுகு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு காத்திரமான அணுகுமுறையாக நாடகம் இருந்து வருவது அனைவரும் அறிந்தது.

நாடகமானது ஒரு பொழுது போக்காகவும், இன்பமளிக்கும் ஒரு நிகழ்வாகவும் இருந்த காலம் மலையேறி பாமர - மக்கள் முதல் பல் கலைக்கழகம் வரை ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் சாதனமாக மாறி விட்டது என்பதில் ஐயமில்லை. இவ் வாறான ஒரு சிறந்த கலைவடிவத்தை வளர்த்தெடுப்பதில் 'கலைவழி இறை பணி' ஆற்றிவரும் யாழ்.திரு மறைக் கலாமன்றம் முக்கிய இடம்பெறுகிறது.பாடசாலை மாணர்களிடையே நாடகம் பற்றிய ஒரு தெளிவினை ஏற்படுத்தி - நாடகமானது ஒரு கற்கை நெறியாக மட்டுமல்லாமல் அதனை அவர்கள் மத்தியில் செயல்திறன் மிக்க ஒரு காத்திரமான வடிவமாக உருவாக்கி அதுசார் கருத்துக்களில் ஒரு திருப்தியான நிலையை உருவாக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் கடந்த பெப்ரவரி 07ஆம், 10ஆம், 11ஆம், 17ஆம் திகதிகளில் நாடக அரங்கயியற் பட்டறைகளை நிகழ்த்தியது. யாழ்ப்பாணத்தில் உள்ள 25க்கும் மேற்பட்ட பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் இதில் கலந்து பெரும் பயனடைந்தார்கள்.

இப்பயிற்சிகள் யாழ்மறைக் கல்வி நடுநிலையம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெற்றன. இதில் நூறுக்குமேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நாடக அரங்கியற் பட்டறையினை, திருமறைக் கலாமன்றத்தினூடான கலைப் பயணங்களை மேற்கொண்டு பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலன்ட், சுவிஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் பலவும் சென்று நாடகம் பற்றிய பலகலை அனுபவங்களையும பெற்றுக்கொண்ட- மன்றச் செயலாளராகிய எம்சாம்பிரதீபன் நெறிப்படுத்தினார். இவர் யேம்ஸ் தொம்சன்(U.K), கிறிஸ்ரில் ஹெ.'.வ்மன்(ஜேர்மனி), கிறிஸ்ரியன்(ஜேர்மனி) போன்ற ஐரோப்பிய நெறியாளர்களின் பட்டறைகளில் கலந்து கொண்டு தாம் பெற்ற அரங்க பட்டறிவுகளை செயன்முறை ரீதியில் நிகழ்த்திக் காட்டியமை மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது. இவர் தனது பயிற்சிகளுடன் இடையிடையே அரங்க நடைமுறைகள் சார்ந்த பல்வேறுபட்ட-வித்தியாசமான அரங்க விளையாட்டுக்களை நிகழ்த்தியமை மாணவர்களின் அவதானம், கருத்தூன்றல் போன்றவற்றை பலப்படுத்த உதவியது.

ஒருவன் சிறந்த நடிகனாக மிளிர்வதற்கு நடிப்புடன் உடல், குரல், மனம் மூன்றையும் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கருவை பதியவைக்கும் முகமாகவே அனைத்து பயிற்சி நெறிகளும அமைந்திருந்தமை பாராட்டத்தக்கது.

ஆரம்பத்தில் மிகுந்த கூச்ச சுபாவத்துடன் பயிற்சிப்பட்டறைக்குள் நுழைந்த மாணவர்கள், பயிற்சிகளில் ஈடுபட்டு கூச்சம் கலைந்து அனைவருடனும் சேர்ந்து செயற்பட்டமை பட்டறையின் வெற்றியையே காட்டியது. நாடகத்தின் மிகவும் இன்றியமையாத அம்சமாக கருதப்படும் - புரிந்துணர்வு, ஒற்றுமையான கூட்டுமுயற்சி என்பன மாணவர் உள்ளங்களில் பதிக்கப்பட்டன. மாணவர்களின் நல்ல பல திறமைகளும் வெளிக்கொணரப்பட்டனர்.

நாடகப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றி வெளியே வந்த மாணவர் ஒருவர் "இதுவரை நாங்கள் நடித்த நாடகங்களில் அனுபவமின்றி நடித்து வந்தோம். ஆனால் பயிற்சிப்பட்டறையில் இணைந்ததன் மூலம் நாடகத்தினை வெறுமனே ஒரு ஆற்றுகைக் கலையாக கருதாமல் அதன் அடிப்படைச் செயற்பாடுகள், வெளிப்பாடுகள், படைப்பாக்கங்கள் போன்றவற்றினை நாம் ஆழமாக அறியக்கூடியதாக இருந்தது" என்றார்.

தொகுப்பு:
தயா லோகதாசன்

மாணவர்கள் பயன்பெறுவதில் திருமறைக்கலாமன்றம் எடுத்த பெரும் முயற்சி தொடரவேண்டும். ஆற்றுகையில் மகிழ்ச்சியடைவோர் எண்ணிக்கை பெருக வேண்டும் என வாழ்த்துகிறோம். ❋



**சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் தயாரித்து நடித்து வெளியிட்ட "வெளிநாட்டு மாப்பிள்ளை" என்ற வீடியோ ஒளிநாடா வெளியீட்டு விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.**

**பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கு.வைத்திலிங்கத்துடன் பிரதேச செயலர் நா. வேதநாயகன் மற்றும் குறும் படத்தில் நடித்த கிராம அலுவலர்கள், படப்பிடிப்பாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ம-135)**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர்,கல்பேட்ஸ்,சேவல் தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைசந்தி, நல்லூர். (நல்லூர் வீடியோ சென்டர் வளவு) (85661)

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, நீலம், பச்சை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய. (85528)

## மணமகள் தேவை

எம்மிடம் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் 30 வயது, உத்தராடம் 4ம் பாதம் பாவம் குறைந்த Engineer தொழில் புரிபவருக்கு தகுதியான மணமகள் தேவை. எம்மிடம் உள்நாடு, வெளிநாடு, பட்டதாரி மணமக்கள உண்டு. ஜாதகம், படத்துடன் செவ்வாய் தவிர்ந்த நாள்களில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ முருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு வீதி. (85644)

## ENGLISH CLASSES

தரம் 1-O/L, A/L பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்களுக்கான ஆங்கிலம் இலக்கணத்துடன் எழுத, பேச இலகு முறையில அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. தொடர்பு:- திரு. திருமதி ஷண்முகநாதன், பலாலி வீதி, (தேவாலய முன் ஒழுங்கை) உரும்பிராய். (85525)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு கிழக்கில கடையுடன் சேர்ந்து அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (இராசாத்தி கடை, பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) தொடர்பு:- தே.பிரதீபன், கலைவாணி மில் லேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (85659)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா சமீறா இன வெள்ளை நிறப்பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- வி.குணபாகன், இல. 343, 609, கே.கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3353 (85667)

## தவறிவிட்டது

திருமதி ஞா.நவரத்தினம், திருகோணமலை எனப் பெயரிடப்பட்ட பார்சல் பெட்டியொன்று 13.03.2001 செவ்வாய்க்கிழமை திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்திருந்த பயணிகள் கப்பலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: சந்திரன் - தவமலர், உலக்கையோடை, உடுப்பிட்டி வடக்கு.
T.P.: 070-212267, 070-212689 (85662)

## விற்பனைக்குண்டு

ELF 250 எல்வ் வாகனம் விற்பனைகுண்டு. தொடர்புகளுக்கு திரு. பொ.உதயன(உதயகுமார்), பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (85630)

WASHING MACHINE(SINGER BRAND-NEW),துவிச்சக்கரவண்டி லுமாலா (SPORTS MODEL) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 18, கச்சேரி நல்லூர் வீதி. T.P 2429, 3252 (C-15807)

150 LF வான் கொம்பிறேசர் வாத்து, மபிறிச் என்ஜின் அத்துடன் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ரவி K.K.S வீதி, சுன்னாகம். (85664)

## மீளப்பெறவும்

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள நியூ சரஸ்வதி விலாஸ் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத தவறுதலாக எடுத்துத் தனது சைக்கிளை விட்டுச் சென்ற (இல- 2164252) நபர் தயவுசெய்து அதனை சரஸ்வதி விலாஸில் கையளித்து தனது சைக்கிளை மீளப் பெற்றுக்கொள்ளவும். (85648)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 20 ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (173656ஏ) | (175334ஏ) | (175334பி) |
| (180182ஏ) | (181771ஏ) | (181805ஏ) |
| (181805பி) | (181805சி) | (181865ஏ) |
| (184545ஏ) | (184560ஏ) | (184636ஏ) |
| (184636பி) | (184636சி) | (184636டி) |
| (184693ஏ) | (184693பி) | (184693சி) |
| (184765ஏ) | (185869ஏ) | (185963ஏ) |
| (185978ஏ) | (185981ஏ) | (185981பி) |
| (186002ஏ) | (186010ஏ) | (186054ஏ) |
| (186054பி) | (186133ஏ) | (186133பி) |
| (186134ஏ) | (186252ஏ) | (186265ஏ) |
| (187240ஏ) | (187240பி) | (187240சி) |
| (187240டி) | (187240ஈ) | (187240எவ்) |
| (188809ஏ) | (188832ஏ) | (188878ஏ) |

### கோப்பாய்

| | |
|---|---|
| (185947ஏ) | (188831ஏ) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (177458ஏ) | (177458பி) | (177458சி) |
| (177458டி) | (180252ஏ) | (180254ஏ) |
| (181850ஏ) | (181927ஏ) | (181927பி) |
| (181927சி) | (181927டி) | (184481ஏ) |
| (184481பி) | (184718ஏ) | (184718பி) |
| (184788ஏ) | (185914ஏ) | (185921ஏ) |
| (185921பி) | (185921சி) | (185921டி) |
| (186046ஏ) | (186196ஏ) | (186300ஏ) |
| (186300பி) | (186305ஏ) | (186317ஏ) |

## 'கெயர்' பணிப்பாளர் யாழ்.விஜயம்

'கெயர் நிறுவனத்தின் பணிப்பாளர் கிறிஸ்ரியன் றபரோ இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரும் அவர் சனிக்கிழமை வரை தங்கியிருந்து கெயர் நிறுவன வேலைத் திட்டங்களைப் பார்வையிடவுள்ளார். யாழ்.அரசாங்க அதிபர் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கவுள்ளார். (க-5)

## மாறிப் பிரசுரமான புகைப்படம்



உள்ளே எட்டாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள அமரர் பொன்னு கந்தசாமியின் 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு விளம்பரத்தில் அன்னாரது புகைப்படத்துக்குப் பதிலாக வேறுபடம் அச்சாகிவிட்டது. அதனால் அந்த விளம்பரத்துக்குரிய சரியான படத்தை இங்கே பிரசுரித்துள்ளோம். தற்செயலாக ஏற்பட்ட தவறுக்காக வருந்துகிறோம்.

மாறிப்பிரசுரமான படத்துக்குரியவரின் உறவினர்களும் பொறுத்தருளக் கோருகிறோம். (ஆர்)

## மகனின் துண்டித்த தலை, கைகளுக்கு உரிமை கோருகின்றார் தாயார்!

களுத்துறை மயானத்தில் நேற்று முன்தினம் மஜிஸ்ரேட் அமல் ரணராஜா முன்னிலையில், 33 வயதான சந்தன உதயகுமாரவின் புதைகுழி தோண்டப்பட்ட போது சடலத்தின் தலையும், கைகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

ஐ.தே.க. எம்பி. ரவி கருணாநாயக்கவின் மாமியின் வீட்டின் முன்னால் வீசப்பட்டிருந்த மனித தலை, ஒரு வாரம முன்னதாக களுத்துறை மயானத்தில் புதைக்கப்பட்ட தனது மகனுடையது என்று இறந்தவரின் தாயார் சிறிமாவதி முறைப்பாடு செய்திருந்தார். அதைத் தொடர்ந்தே அந்தப் புதைகுழி தோண்டப்பட்டது.

செய்தித்தாள்களில் இறந்தவரின் தலையின் படம் வெளியாகி இருப்பதை அடுத்து தான் அதனை இனங்காண முடிந்ததாக தாயார் நீதிவானிடம் தெரிவித்தார்.

தனது மகன் பெப்ரவரி 17 ஆம் திகதி களுத்துறை அரசினர் வைத்தியசாலையில் இறந்ததாகவும் அவர் தெரிவித்தார். (க-20)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வி புராதனி கிருபாகரன்

பிறந்த திகதி - 21-03-2000

எங்கள் அருமைத் திருமகள்
செல்வி புராதனி கிருபாகரன்
பதினாறு பேறுகளையும் நிறைவுறப் பெற்று
நீடூழி வாழ அருளும் வண்ணம்
எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை
மனதில் இருத்திப் பிரார்த்திக்கின்றோம்!
வாழ்த்துகின்றோம்!!

கிருபாகரன் - சிவகலை தம்பதியினர்
(பெற்றோர்)
மற்றும் உறவினர்கள்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்,
(திருகோணமலை)

(85653)

## க.பொ.த. (உயர்தர) விஞ்ஞான மாணவர்களுக்கு

### "சுடர் ஒளி"

ஆதரவுடன்
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க
தூய விஞ்ஞானப் பிரிவினர்
யாழ்.றோட்டரிக் கழகத்துடன்
இணைந்து நடத்தும்
பாடசாலை மாணவர்களுக்கான

### "மாணவ ஆய்வாளர் விருது"

மேற்படி விருது தொடர்பாக வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள்
1) பரிவு பற்றிய ஓர் ஆய்வு.
2) யாழ்.குடாநாட்டில் நீர் மாசடைதல் பற்றிய ஓர் ஆய்வு.
3) தமது சுற்றாடலிலுள்ள மருத்துவத் தாவரங்கள் - இனங்காணல், பயன்பாடுகள், Herbarium தயாரித்தல்.

விண்ணப்பித்த மாணவர்கள் செயற்றிட்ட அறிக்கைகளை எதிர்வரும் 24-03-2001 சனிக்கிழமை வரை சமர்ப்பிக்கலாம்.

(C/15810)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 14 - 11 - 1961



ஆண்டவன் அடியில் 01 - 04 - 2000

### அமரர் சங்கரப்பிள்ளை பாலசிங்கம்

திதி 21-03-2001

நாம் வாழ்ந்த வசந்த காலம்
ஞாபகத்தில் இல்லை....
சுவாசமாக....
நினைவுகளின் வெளிச்சத்தில்
உங்கள் முகம்
கள்ளமில்லாப் புன்சிரிப்போடு
உணர்வுகளில்
உங்கள் ஈர நினைவுகளை
சுவாசித்தே
உயிர் வாழ்கின்றோம்!

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
மருமக்கள், பெறாமக்கள்,
மாமன், மாமி,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள், சுற்றத்தார்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(85666)

## இனிய வாழ்த்துக்கள்!

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த
திரு.திருமதி ஜெயரஞ்சன் - சிவகுமாரி
தம்பதிகளின் அன்புப் புதல்வி

### செல்வி நிலானி

அவர்களின் பூப்புனித நீராட்டு விழா இன்று (21-03-2001) புதன்கிழமை இல.49 3/2, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தையில் உள்ள அவர்களது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுவதையிட்டு செல்வி நிலானிக்கு எங்களின் இதயங்கனிந்த இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
திரு. சபாநாயகம் சபாரத்தினம் (மாமா)
திருமதி கானசரஸ்வதி சபாரத்தினம் (மாமி)

ஆத்தியடி,
பருத்தித்துறை.

(85674)

## ஊழலின் பின்னரும் வாஜ்பாய்க்கு ஆதரவு

இந்திய அரசாங்கத்தை ஆயுத பேர ஊழல் உலுக்கி வரும் வேளையிலும், பிரதமர் வாஜ்பாய் தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டுமென்று 70 சதவீதமான இந்தியர்கள் கருதுகின்றனர்.

25 சதவீதத்தினர் மட்டுமே அவர் பதவி விலக வேண்டும் என்று கூறுகின்றனர். 'இந்தியடுடே' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இவை தெரிய வந்துள்ளன. (ஓ)

# செச்சினிய மனிதப் புதைகுழிக்கு ரஷ்ய இராணுவமே காரணம்

## மனித உரிமைகள் அமைப்புக் கூறுகிறது

மொஸ்கோ, மார்ச் 21

செச்சினியாவில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களில் சில, ரஷ்ய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களுடையவை என்று கூறப்படுகிறது.

ரஷ்யாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள மனித உரிமைகள் அமைப்பான ''மெமோரியல்'' வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

செச்சினிய தலைநகர் குரோஸ்னியின் புறநகர்ப் பகுதியில் ரஷ்ய இராணுவத் தளம் உள்ள கங்கலாவுக்கு அருகே கடந்த மாதம் பாரிய மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது

செச்சினியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டவர்களே இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டிருப்பதாக ரஷ்ய இராணுவம் அப்போது தெரிவித்தது.

இதுகுறித்து ஆய்வுகளை நடத்திய 'மெமோரியல்' மனித உரிமை அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,—

புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட 60 சடலங்களில் 17சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும்— ரஷ்யப் படைகளால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் பொதுமக்களின் சடலங்களே அவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்பதற்கு முன்னர் மிகக் கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட அடையாளங்கள் சடலங்களில் காணப்படுவதாகக் கூறியுள்ள மனித உரிமைகள் அமைப்பு, இறந்தவர்கள் 17 — 41 வயதுகளுக்கு உட்பட்டவர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

செச்சினியத் தீவிரவாதிகளை அடக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் ரஷ்யப்படையினர் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்து வருவது குறிப்பிடத்தக்கது (ஓ-7)

## வால்ஸ் 500 விக்கெட் சாதனை

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது பந்து வீச்சாளர் என்ற பெருமையை மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் கொட்னி வால்ஸ் பெறுகிறார்.

போர்ட் ஒவ்ஸ்பெயினில் தென் ஆபிரிக்க அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியின் போது ஜக் கலிஸின் விக்கெட்டை வீழ்த்திய போது இந்தச் சாதனையை வால்ஸ் படைத்தார்.

## ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக பதவி விலகும் கோரிக்கையை பிரதமர் வாஜ்பாய் நிராகரிப்பு



புதுடில்லி, மார்ச் 21

'தெகல்கார்' செய்தி நிறுவனம் சுமத்தியுள்ள பாதுகாப்பு பேர ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக பதவி விலக வேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நிராகரித்து விட்டார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் இடம்பெற்ற பாரதிய ஜனதாவின் ஊழியர் கூட்டத்தில் உரையாற்றுகையில் இது குறித்து அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அரச தயாராக இருப்பதாகவும் —

ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பங்காரு லஷ்மன், ஜெயா ஜெட்லீ ஆகியோர் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகியுள்ளபோதும், காங்கிரஸ் கட்சி ஆதாரமின்றி குற்றஞ் சுமத்துவதாகவும் —

பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்தார்.

ஊழல் குறித்து விசாரணை நடத்தும்படி கோரி வந்த காங்கிரஸ் விசாரணை மன்றம் அமைத்தவுடன், தற்போது அரசு பதவி விலக வேண்டும் என்று கோருகிறது என்றும் வாஜ்பாய் சுட்டிக் காட்டினார். (ஓ)

## சமாதானப் பரிசாகக் கிடைத்த 1லட்சம் டொலர்களை மண்டேலா பூகம்ப நிதிக்கு வழங்கினார்



புதுடில்லி, மார்ச் 21

சென்ற ஆண்டுக்கான காந்தி சமாதான விருதுபெற்ற தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா' தமக்குக் கிடைத்த பரிசுத் தொகையான ஒரு லட்சம் டொலர்களையும் குஜராத் பூகம்ப நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளார்.

இனவெறியில்லாத தென் ஆபிரிக்காவை உருவாக்கியதற்காக இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் கடந்த வெள்ளிக்கிழமை நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கியிருந்தார்.

வறிய மக்களின் முன்னேற்றத்தில் பங்கு வகித்த பங்களாதேஷ் கிராமிய வங்கிக்கு கடந்த ஆண்டுக்கான காந்தி சமாதானப் பரிசு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஷெரோன் அமெரிக்கா செல்ல இஸ்ரேலில் வன்முறை வெடித்தது

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் பாரிய எதிர்பார்ப்புகளுடன் அமெரிக்கா சென்றுள்ள வேளையில் இஸ்ரேலில் வன்முறைகள் வெடித்துள்ளன.

பெத்லகேமையும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் இஸ்ரேலிய இராணுவத்தினர் சுற்றிவளைத்துள்ள நிலையில் அப் பகுதியூடாகச் சென்ற இஸ்ரேலியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அத்துடன் இஸ்ரேலிய எல்லைப் புறங்களை நோக்கி பலஸ்தினர்கள் மோட்டார் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்காவின் உதவியை ஷெரோன் நாடியுள்ள அதேவேளை பலஸ்தீனியர்கள் வன்முறையைக் கைவிட்டால் மட்டுமே பேச்சுக்களை தொடர்வது சாத்தியமாகும் எனக் கூறியுள்ளார், (ஓ)

## ரஷ்யாவுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்

ரஷ்யா மீண்டும் ஈரானுக்கு ஆயுத விற்பனை மேற்கொள்ளும் போது, நவீனரக ஆயுதங்களையோ, இராணுவ

### உலக அரங்கில்

உயர் தொழில் நுட்பங்களையோ வழங்கக் கூடாதென்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஈரானின் பாதுகாப்பிற்காக ஆயுதங்களை வழங்கப்போவதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சமீபத்தில் அறிவித்திருந்ததை அடுத்தே அமெரிக்கா இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. (ஓ)

## பாக்தாத்தில் குண்டு வெடிப்பு: இருவர் பலி; 27 பேர் படுகாயம்!

பாக்தாத், மார்ச் 21

ஈராக்கில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்; 27 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலரின் உடல் நிலை மோசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்தின் மத்திய பகுதியில் உள்ள பஸ் நிலையத்தில் பயணிகளுடன் நின்று கொண்டிருந்த இரு பஸ்களுக்கு இடையே வைக்கப்பட்டிருந்த பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. குண்டு வெடிப்பில் இரு பஸ்களும் முற்றாகச் சேதமடைந்தன.

இந்தக் குண்டு வெடிப்புக்கு அமெரிக்காவும் இஸ்ரேலுமே காரணம் என்று ஈராக்கிய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் ஈராக் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்திய பின்னர் பாக்தாத்தில் நிகழ்ந்துள்ள முதலாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அசாமில் 6 பேர் பலி!

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் கடந்த ஞாயிறு இரவு 'காம்டெனன்' கிராமத்தில் அசாமியர் அல்லாத ஆறு பேர் அசாமியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

தேசிய 'போடோலாண்ட்' ஜனநாயக முன்னணி தீவிரவாதிகள் கிராமத்துக்குள் நுழைந்து கண்மூடித்தனமாகச் சுட்டதில் இந்த 6 பேரும் உயிரிழந்துள்ளனர்.

## பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா அடுத்த மாதம் பதவி விலகுவார்?

டாக்கா, மார்ச் 21

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, அடுத்தமாதம் பதினோராம் திகதிக்குப்பின் எப்போதுவேண்டுமானாலும் தான் பதவி விலகக் கூடும் என்று அறிவித்துள்ளார்.

இதே நாளில், 1971 இல் பாகிஸ்தானிடமிருந்து பங்களாதேஷ் விடுதலையடைந்த பின்னர் முஜிபுல் ரஹ்மானின் அரசு உருவாக்கப்பட்டது

டாக்காவில் நடைபெற்ற விழா ஒன்றில் ஷேக்ஹசீனா உரையாற்றியபோது எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் பொதுத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்ய இருப்பதாகக் கூறினார்.

4 எதிர்க்கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டணி' பிரதமர் ஹசீனாவின் உடனடி பதவி விலகலை கோரி வருவது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ ஆட்சியின் எதிர்காலம் குறித்து ஆலோசனை

இஸ்லாமாபாத், மார்ச் 21

பாகிஸ்தானில் உயர் இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம்கூடி, இராணுவ ஆட்சியின் அரசியலகள் எதிர்காலம் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அரசாங்கததின் மீது இராணுவத்தின் அதிகாரத்தை மேலும் அதிகமாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர். (ஓ)

## இந்தியா ஊழல் நிறைந்த நாடாம்

ஆசியாவில் ஊழல் மிகுந்த நாடுகளாக இந்தோனேசியாவும், இந்தியாவும் இருப்பதாக ஊழலுக்கு எதிரான அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஆசியாவில் ஜப்பானில் ஊழல் மற்றும் லஞ்சம் மிகக் குறைவாக உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## ஸ்பெய்னில் கார்க் குண்டு வெடித்து ஒரு பொலீஸ்காரர் மரணம்!

ஸ்பெய்னில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் ஒரு பொலீஸ்காரர் உயிரிழந்தார். 3 பேர் காயமடைந்தனர்.

வடகிழக்கு நகரான ரோசேஸில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

வெடித்த குண்டு 20 கிலோ கிராம் வெடிப்பொருளைக் கொண்டிருந்ததாகவும்—

அநாதரவாக நின்றுகொண்டிருந்த காரைச் சோதனையிட்ட போதே குண்டு வெடித்து 32 வயதான பொலீஸ்காரரைப் பலி கொண்டதாகவும்— ஸ்பானியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை. ஆனாலும் கடந்த 33 வருடங்களாகப் பிரிவினைகோரிப் போராடி வரும் 'பஸ்ரியோ' தீவிரவாத அமைப்பினரே இந்தக் குண்டுவெடிப்புக்குக் காரணம் என்று பொலீஸார் கூறினர்.

சமீப காலமாக 'பஸ்ரியோ' தீவிரவாதிகள் நடத்தி வரும் பல கார்க்குண்டுவெடிப்புத் தாக்குதல்களில் 5 பொலீஸார் உயிரிழந்துள்ளனர்.

## தமிழக அரசியலில்...

## ஒன்பதுசிறுகட்சிகள் இணைந்து தமிழகத்தில் மூன்றாவது அணி

சென்னை, மார்ச் 21

எதிர்வரும் தமிழகச் சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு 9 சிறுகட்சிகள் இணைந்து மூன்றாவது அணியை உருவாக்கியுள்ளன.

நேற்று முன்தினம் உருவான இந்தப் புதிய கூட்டணிக்கு மக்கள் ஜனநாயக முன்னணி என்று பெயரிடப்பட்டுள்ளது

புரட்சித் தலைவர் அ.தி.மு.க., மக்கள் தேசிய காங்கிரஸ், இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, ராஷ்டிரீய ஜனதாதளம், லோக்ஜனசக்தி, பகுஜன் ரமாஜ், சமாஜ்வாடி, தமிழ் தன்னுரிமை இயக்கம், தமிழ் மாநில வாக்காளர் பேரவை ஆகிய 9 கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள மூன்றாவது அணி எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வட இந்திய மாநிலங்களில் செல்வாக்குப் பெற்ற பல கட்சிகளின் தமிழகப் பிரிவுகள் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தவறிவிட்டது

நெல்லண்டை, பருத்தித்துறை எனும் முகவரியைச் சேர்ந்த நவரட்ணம் கேதீஸ்வரா என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 732481737 V) யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் 18-3-2001 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலுள்ள விலாசத்தில் அல்லது 070-212247 T. P. இல் தொடர்புகொள்ளவும்.

(85680)

உ

அரியாலை 82ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா பற்றிய

## ஆலோசனைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 25-03-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யா/கனகரத்தினம் ம. ம. வி. மண்டபத்தில் திரு. ச. உருத்திரேஸ்வரன் அவர்களது தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. 81ஆவது விழா அறிக்கை
4. வரவு - செலவு அறிக்கை
5. 82ஆவது விழா உத்தியோகத்தர் தெரிவு
6. பிற விடயங்கள்

அனைவரும் வருக.

பொ. நடராசா
பொதுச் செயலாளர்.

குறிப்பு: இதனைத் தொடர்ந்து அரியாலை ஐக்கிய கழகத்தின் ஆலோசனைக் கூட்டமும் இடம்பெறும்.

பொருளாளர்,
அரியாலை ஐக்கிய கழகம்.

(85683)

யாழ். மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

கடந்த 18. 03. 2001 ஞாயிறு நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தில் 2001ஆம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்டத் தலைவர் -
திரு. சி. சுந்தரலிங்கம்
(லிங்கம் பேக்கரி, நாவலர் வீதி)

மாவட்ட உபதலைவர் -
திரு. ஆ. கந்தையா
(கண்ணியம் பேக்கரி, இருபாலை)

மாவட்ட செயலாளர் -
திரு. கு. காந்தரட்ணம்
(ஜெயக்குமரன் பேக்கரி, மானிப்பாய்)

மாவட்ட உபசெயலாளர் -
திரு. இ. குமாரசாமி
(சுவர்ணா பேக்கரி, சுன்னாகம்)

மாவட்ட பரிசோதகர் -
திரு. இ. அமரசேனாபதி
(சிவரட்ணம் பேக்கரி, வல்வெட்டித்துறை)

நிர்வாகம்
யா/மா/பே/உ/ச.

317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/15823)

## கண்ணீர் அஞ்சலி

பிரபல ஆங்கில ஆசிரியர்
திரு. விஜயபாஸ்கர்
அவர்களின் அன்புத் தந்தையார்
**சோ. வைத்திலிங்கம்**

அவர்கள் 17-03-2001 இல் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
BARATHY - சித்தன்கேணி,
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம் - இணுவில்.

(85684)

# ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணத்தில்பிராந்திய அலுவலகம் இல்லாமையால் ஊழியர்கள் சிரமம்

## 5 ஆண்டுகளாக சம்பளமும் இல்லை

தென்மராட்சி, மார்ச் 21

ஆனையிறவு உப்பளத்தின் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இயங்காததனால் அங்கு கடமையாற்றிய ஊழியர்களும் அவர்களது குடும்பங்களும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உப்பளத்தில் கடமையாற்றியபோது ஓய்வுபெறும் வயதையடைந்துள்ள தொழிலாளர்கள் பலர் பிராந்திய அலுவலகம் இங்கு இயங்காததால் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

தொழிலாளர்கள் சிலர் மரணமடைந்துள்ள போதிலும் அவர்களின் குடும்பங்கள் எந்தவித கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளன.

கடந்த காலங்களில் உப்பளத்தில் 285 நிரந்தரத்தொழிலாளர்கள் கடமையாற்றி வந்தனர். யுத்த இடப்பெயர்வுகளால் இந்தத் தொழிலாளர்கள் தற்போது வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தங்கியுள்ளனர். இவர்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளாக சம்பளம் வழங்கப்படவில்லை.

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் அண்மையில் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்ட போது இந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த மூன்று வருடங்களுக்கான சம்பளம் கடந்த ஜனவரி மாதத்தில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது எனினும் இதுவரை அது வழங்கப்படவில்லை.

'உ' பங்கீட்டு அட்டை வைத்துள்ள இந்த ஊழியர்கள் இடப்பெயர்வின் பின்னர் நிவாரணமும் இன்றி சம்பளமும் இன்றி பெரிதும் கஷ்ட நிலையில் உள்ளதாக பாதிக்கப்பட்ட உப்பளத்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

(ம-117)

## இடமாற்றத்தை இரத்துச் செய்யப் கோரிக்கை

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் உதவி டாக்டராகக் கடமையாற்றும் அ. செல்வநாயகத்தை வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக் கோரி சங்கானை பாரதி சனசமூக நிலையத்தினர் வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மகஜரின் பிரதி வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்விவகார அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆலயத்தில் அடிக்கல் நடும் நிகழ்வு

கோண்டாவில்மேற்கு அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வியாழக்கிழமைகாலை 6 மணிக்கு சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜாக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

## கூட்டம்

யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர், சாரதிகள், ஊழியர்கள் நலன்புரிச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் தலைவர் நா. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் க. செல்வராஜா கேட்டுள்ளார். (ம-ரி)

## அமெச்சூர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்திய தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்துள்ளன.

இந்தப் பரீட்சை முடிவுச் சான்றிதழ்களை 347, கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்'டில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-8]

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

நுண்கலைமாணி
(சித்திரமும் வடிவமைப்பும்)
கற்கை நெறி
இரண்டாம் வருட
முதலாம்
அரையாண்டு
பரீட்சை
ஆங்கில பாடம்

மேற்படி ஆங்கில பாட பரீட்சை 23-03-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- பதிவாளர்

(சி-15816)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்:- 01-04-2001
நேரம்:- 10.00 மணிக்கு (புதியநேரம்)
இடம்:- திருஇருதயக் கல்லூரி மண்டபம், நெல்லியடி.

மன்றின் அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தை உறுதி செய்து தவறாது கலந்துகொள்ளவும். அங்கத்தவர்கள் இங்கில்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட முகாமையாளர்கள் பங்குபற்றலாம்.

2001 ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெறும். பிரேரணைகள், அபிப்பிராயங்கள் எதுவும் இருந்தால் 27-03-2001 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்றில் சமர்ப்பித்து சம்பந்தப்பட்டவர் தவறாது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளவும்.

வ. இராஜதுரை,
செயலாளர்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.
(சி/15824)

யாழ். பல்கலைக்கழக
மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்ற
**"கடலோசை 2"**
சஞ்சிகை வெளியீட்டு நிதிக்கான
அதிர்ஷ்டலாபச்

## சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல: 2830
இரண்டாம் பரிசு இல: 8949
மூன்றாம் பரிசு இல: 1920

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
1) 2634 2) 0252 3) 4756
4) 3019 5) 4281

குறிப்பு: பரிசுகளை 19-04-2001 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலய நேரத்தில் கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

இளம் பொருளாளர்
மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றம்
(85678) (2ஆம் அணி)




சர்வதேச லயன்ஸ் கழகங்களின் கூட்டமைப்பு அன்பளிப்புச் செய்த 45 லட்சம் ரூபா பெறுமதியான கண் சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கையளிக்கும் வைபவம் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். யாழ். ஆயர் இல்லக் குரு முதல்வர் வண.செல்வராசா அருகில் காணப்படுகின்றார்.

லயன்ஸ் மாவட்ட ஆலோசகர் கே.தில்லைநாதன் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்தில் காணலாம். மாவட்ட ஆளுநர் ரொசித்தா உடவத்த அருகில் மாலையுடன் காணப்படுகிறார்.

கண் சத்திரசிகிச்சை உபகரணங்களை மாவட்ட ஆளுநர் ரொசித்தா உடவத்த கண் வைத்திய நிபுணர் ச.குகதாசனிடம் கையளிப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: கொனிக்கா லாப்)*

# யுத்தம் நிறுத்தப்பட்டால் மட்டுமே குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணி

## ஐ.நா.திட்டப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்21

யாழ்.குடாநாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டுச் சமாதானம் ஏற்படுத்தப்படும் வரையில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படமாட்டாது

ஐ.நா.அபிவிருத்தித் திட்டபேச்சாளர் ரமேஸா பாலசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவுடன் 1998 ஆம் ஆண்டின் இறுதியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த இடங்களைக் கண்டு பிடிபதிலும், கண்ணிவெடி அகற்றும் பணியிலும் கண்ணிவெடி அகற்றும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று ஈடுபட்டிருந்தது.

சிம்பாவே நாட்டில் செயற்படும் 'மைன் டெக்' என்ற தனியார் நிறுவனத்தின் சேவையை ஐ.நா அபிவிருத்தித் திட்டம் பெற்றிருந்தது. இதற்கான செலவை ஆஸ்திரேலியா உட்படப் பல நாடுகள் வழங்கியிருந்தன. கடந்த வருடம் ஆனையிறவு இராணுவ முகாம் அழிக்கப்பட்டதை அடுத்து கண்ணிவெடி ஆய்வுகளை மேற்கொண்டிருந்த ஐ.நா அபிவிருத்தித் திட்டம் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

ஸிம்பாவேயின் 'மைன் டெக்' நிறுவனம் கண்ணிவெடி ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மூன்று மோப்ப நாய்களுடன் கூடிய மூன்று குழுக்களுடன் இலங்கை வந்திருந்தது. இவர்கள் திருகோணமலையிலிருந்து கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணம் சென்று கடமையாற்றினர்.

கடமையில் ஈடுபட்டிருந்த காலப் பகுதியில் முதற்கட்டமாக கண்ணிவெடிகள், புதைக்கப்பட்டிருக்கலாம் எனறு கருதப்பட்ட இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்டமாக அந்த இடங்களில் வேலிகள் அமைத்துப் பாதுகாப்பு வழங்கியும, மூன்றாம் கட்டமாக இயலுமான இடங்களில் கண்ணிவெடிகளை அகற்றியும், பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் மட்டும் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்ட 150 பிரதேங்கள் அடையாளம் காணப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டன. இந்தப் பணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிற்றுவிக்கப்பட்ட உள்ளூர் வாசிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

### ஆசிரியர்களின் முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம்,மார்ச்21

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற பொது வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி பாதிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் தமது முறைப்பாடுகளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அரசியல் பழிவாங்கல் குழுவுக்கு அனுப்புமாறு வடமாகாண ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை 'செயலாளர், அரசியல் பழிவாங்கல் குழு, கல்வியமைச்சு, இசுருபாயா , பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு அனுப்பும்படி சங்கம் கேட்டுள்ளது. 'தொலைநகல்' (பக்ஸ்) - இல. 01-866368) மூலமும் தமது முறைப்பாடுகளை அனுப்பலாம் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

### மாநகர சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்மாநகர சபைக் கூட்டம் மேயா என்.ரவிராஜ் தலைமையில் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சபைக்கூட்டத்துக்கு முன்பதாக 28 ஆம் திகதி காலை நிதி, மராமத்து, சுகாதாரக்குழுக்களின் கூட்டங்கள் நடைபெறும். (ஐ-5)


## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

12.03.2001 இல் ஒப்படைத்த படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

எதிர்வரும் 25.03.2001 அன்று படச்சுருள்களும் வீடியோ கசற்றுக்களும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

நல்லூர் T.P.021-2604 (85682) புலோலி T.P.070-212720


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை கணித ஆசிரியர்
திரு.ந.புவனேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்
**அமரர் நடராசா தெய்வானை** அவர்கள்
20.03.2001 இல் காரைநகரில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்.,*
*காரைநகர்.* (C/15825)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### S.R.யோகானந்தன்

(உதவி சுங்கப் பணிப்பாளர், கொழும்பு)

சரசாலையைப் பிறப்பிடமாக் கொண்ட கொழும்பு சுங்கத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் S.R.யோகானந்தன் 19.03.2001 அன்று காலமானார்.

அன்னார் புவனேசுவரியின் அன்புக் கணவரும் சரசாலை இராசக்கோன், காலஞ்சென்ற தெய்வநாயகி அவர்களின் கனிஷ்ட புத்திரனும் குழந்தைவேலு, சின்னத்தம்பி, விவேகானந்தன், சாந்தநாயகி, மனோன்மணி, சதாபக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2001) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப 4.30 மணிக்கு பொரளை கனத்தை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
K.சபாநாதன்
(கொழும்பு.)

(C/15826)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றிவரும்
சோ.சிவசுந்தரம்
அவர்களின் அன்புச் சகோதரர்
**சோ.கமலானந்தன்** 09.03.2001 இலும்,
அன்புத் தாயார்
**திருமதி சோ.கமலாம்பிகை** 14.03.2001 இலும்
இறைவனடி அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம்.

இவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
பணியாளர்கள்.

வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை. (C/15822)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரைராஜா தவமலர்

அல்வாயைச் சேர்ந்த திருமதி துரைராஜா தவமலர் கடந்த (19.03.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.03.2001) புதன்கிழமை அல்வாய் பங்கு வேம்படி மயானத்தில் பி.ப 4.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.துரைராஜா.(J.P)
(விவாகப் பதிவாளர் வடமராட்சி)

*"தவமஹால".*
*அல்வாய்.* (C/15821)

### திருமதி இலட்சுமிப்பிள்ளை இரத்தினசாமி (குஞ்சு)

காங்கேசன்துறை, தையிட்டியை நிரந்தர வதிவிடமாகவும், மாதகல், அந்தோனியார் வீதியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி.இலட்சுமிப்பிள்ளை இரத்தினசாமி 19.03.2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாதகல் நாகலிங்கம் ஞானம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், தையிட்டி காங்கேசன்துறை ஆறுமுகம் இரத்தினசாமியின் அன்பு மனைவியும் ஆதித்தனின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*அந்தோனியார் கோவிலடி,*
*மாதகல்.*

தகவல்:
நா.கந்தசாமி
(சகோதரன்)

(85685)

### காசிப்பிள்ளை கந்தையா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கந்தையா 18.03.2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், கந்தசாமி(விவசாயப் போதனாசிரியர்), மகேந்திரன், யோகம்மா, ஆனந்தகௌரி ஆகியோரின் அன்புத் தநதையும், பத்மாவதி, கமலநாயகி, குமாரசாமி (ஓய்வுபெற்ற பரிசோதகர். இ.போ.ச), இரத்தினசிங்கம் (இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவாஜினி (லக்கி), சிவநந்தினி, செல்வநந்தினி, கஜானனன், ஸ்ரீரூபி, ஸ்ரீகோவர்த்தினி, கஜேந்தினி, ஜெயந்தினி, ஜெயகாந்தன், பிரேமலதா, நளினி, சிவானந்தன், உமாகரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், மயூராயினி, கிரிசாந், பிரசாந், டிவினா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2001) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கந்தசாமி,
க.மகேந்திரன்
(மக்கள்)

*துரைவீதி,*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

(85681)

## மாநகர ஆணையர் - சுகாதார அதிகாரி இழுபறி:

# நீதிவான் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் இணக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பகுதிக்கு புதிதாக நியமனம் செய்யப்படும் வைத்திய அதிகாரியின் நியமனம் தொடர்பாக மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படும் வரை-

தற்போது கடமையாற்றும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் மாநகர சபையின் சுகாதார சேவைகள் தொடரப்படவேண்டும்.

யாழ்மாநகர சபைக்கும் சபையின் சுகாதாரப் பிரிவுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பொருட்டு நேற்று யாழ்.நீதிமன்றத்தில் யாழ்.நீதிவான் நடத்திய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் -

வரியிறுப்பாளர் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும்-

நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தமையாலும் -

மாநகர சபை முதல்வர் கொழும்பில் தங்கி இருப்பதாலும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு யாழ்நீதிவான் இ.த.விக்னராஜா இந்தக் கலந்துரையாடலை நடத்தினார்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராசா தணிகாசலம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன், பிரதிமேயர் செல்லன் கந்தையன், சுகாதாரப் பிரிவு நிர்வாக உத்தி யோகத்தர் எஸ்.இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். மாநகர சபை மேயர் சட்டத்தரணி என்ரவிராஜ் கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொணடு இக்கலந்துரையாடலுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் மாநகர சபை வைத்திய அதிகாரி பதவியில் இருந்து தான் ஓய்வு பெறப்போவதாக நீதிவானிடம் தெரிவித்தார்.

ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்டதன் பிரகாரம் சுகாதார வைத்திய அதிகாரி பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் புதன்கிழமை நடைபெறவுள்ளதாக மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

இருதரப்பினரின் கருத்துக்களுக்கும் செவிமடுத்த நீதிவான் சுகாதார வைத்திய அதிகாரி ஓய்வுபெற்றுச் செல்லும் போது இரு தரப்பினருக்கும இடையில் சுமுகமான நிலை நிலவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மேயர் கொழும்பிலிருந்து யாழப்பாணம் வந்ததும் தீர்வு காணப்படும் என்றும் கூறினார்.

மேலும் -

மாநகர சபையின் குடும்ப நல சேவையாளர்களுடனும் நீதிவான் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கலந்துரையாடினார்.

அவர்களது பிரச்சினைகளை நீதிவான் கேட்டறிந்துகொண்டார்.

மேயர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பின்னர் இவர்களின் சம்பளப் பிரச்சினை, கோல உடைப் பிரச்சினை, கள அலவன்ஸ், நிரந்தர நியமனம் ஆகியன தொடர்பாக சுமுகமான தீர்வைக் காண்பது என்று அங்கு முடிவு செய்யப்பட்டது. (ஐ-3-5-6-9-10)

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களும் மதிய உணவினைப் பெறுவர். தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் - இவ்வாறு கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ஐ-7)

## பேச்சு நடத்த புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேணடும் என்று கனடா விரும்புகிறது. தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தால் நாட்டில் 40 வீதமானோர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்கொலை புரிவோரின் வீதமும் இங்கு அதிகரித்தே காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் கனடா அரசு கடந்த 10 வருடங்களாக உதவி வருகிறது. இந்த உதவிகள் அனைத்தும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படுகின்றன.

இங்கு என்க்குத் தெரிவிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவேன் - என்றும் கனேடியத் தூதர் தமது உரையில் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் உரையாற்றிய வணபிதா ஏ.ஜ.பேனாட் அடிகளார் கூறியதாவது:-

தமிழ் மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே. எமது மரபுவழித தாயகம் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய இனம் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதங்கள் இன்றி இந்த நாட்டிலுள்ள இரு பிரிவினரும் சமமாக மதிக்கப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

நாங்கள் எமது சுய விருப்பத்தைத் தெரிவிக்க அரசாங்கம் அனுமதிக்கவில்லை. உதாரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் மக்கள் கலந்துகொள்ள விடாமல் தடுக்கப்பட்டது - என்று கூறினார்.

வணபிதா டேமியன் உரையாற்றும் போது -

குடாநாட்டில் 15 சதவீதமான சிறுவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இடப்பெயர்வு, வறுமை போன்ற காரணங்களினால் பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இதனால் மாணவர் சமூகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

மனிதநேய அமைப்புக்களின் பிரமுகர் சு.பரமநாதன் தனது உரையில் -

வலி.வடக்குப் பகுதி மக்களுக்காக ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை நாம் முழுமையாக எதிர்க்கிறோம். இந்த வீட்டுத் திட்டத்தின் மூலம் எமது விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தெல்லிப்பழையிலுள்ள புற்று நோய் சிகிச்சை நிலையத்தை இயங்கச் செயவதற்கு இராணுவத்தினர் அனுமதித்துள்ள போதிலும் சுகாதார அமைச்சு இழுத்தடித்து வருகிறது.

இந்தப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் இருந்த "கோபால்ற்" இயந்திரம் 1990 இல் தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தற்பொழுது இது எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பது கூடத் தெரியாமல் உள்ளது.

41 லட்சம் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது - என்றார். (ஐ-5-6)

# கொழும்பில் மறியல்

கொழும்பு,மார்ச்21

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை ஆரமபிக்க ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கோரி நவசமசமாஜக் கட்சி கொழும்பில் மறியல் போராட்டம் நடத்த உள்ளது.

கொழும்பு நகரில் மத்திய இடம் ஒன்றில் நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ள இந்த மறியல் போராட்டத்தில் பத்துத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பும் பங்குபற்ற உள்ளது.

வலி-வடக்குப்பகுதி மக்களின் பிரச்சினை குறித்தும் இந்தப் போராட்டத்தில் குரல் எழுப்பப்படவுள்ளது.

## தரைவழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்களை ஒன்று சேர்த்து செயற்படுத்த வேண்டும்.

குடாநாட்டில் தற்சமயம் நிலவும் அமைதியான, சுமுகமான சூழ்நிலை தொடரவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவும் போக்குவரத்தை சுமுகமாக மேற்கொள்ளவும் தரைப்பாதையைத் திறக்க வேண்டும் என்றும் ஆயர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை இலங்கை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் ஆயர் கனேடியத் தூதரிடம் கேட்டுக்கொண்டார். (ஐ-3)

## 6 தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் வீதித் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இருவரும் இந்த விபத்தில் சிக்கிப் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

வானில் பயணம் செய்தவர்கள் ரெலோ அமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் உறவினர்கள் எனத் தெரியவந்தது. (ஐ-3)

## தொழுநோய்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடப்பட்டது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இந்த ஆஸ்பத்திரியைக் கையேற்பதன் மூலம் வாவியில் இருந்து மட்டக்களப்பின் அனைத்துப் பகுதிகளையும் கண்காணிக்க முடியும் என்பதால் படையினர் ஆஸ்பத்திரியைத் தம்வசம் ஆக்கிக் கொள்கின்றனர். வாவிக்கு அப்பால் படுவான்கரைப் பகுதியின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. (ஐ-7)


**க.பொ.த. சாதாரண பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் கவனத்துக்கு!**

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளை நீங்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள உங்களது பெயர், சுட்டெண்ணுடன் தொடர்பு கொள்ள:

**அம்பாள் தொலைத் தொடர்பு நிலையம்**

கம்பஸ்லேன் திருநெல்வேலி. T.P.2742


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இராசமணி

சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இடம் பெயர்ந்து கொக்குவில் நந்தாவில் லேனில் வசித்தவருமாகிய சிங்கப்பூர் கணபதிப்பிள்ளை இராசமணி நேற்றுமுன் (20.03.2001) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசேஸ்வரியின் அன்புத் தாயாரும், அ.இராமநாதனின் (சோதி) அன்பு மாமியாரும், மஞ்சுளாவின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நவரட்ணராஜா, ஈஸ்வரபாதம் மற்றும் நடராசா ஆகியோரின் சகோதரியும், மயில்வாகனம் பரமநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), இளையபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் நந்தாவில் லேனில் உள்ள இல்லத்தில் இன்று (21.03.2001) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அருணாசலம் இராமநாதன் (மருமகன்)

நந்தாவில் லேன், கொக்குவில். (C/15828)


**இதோ வந்து விட்டது**

எம்மிடம் புதிய, பழைய படங்களின் போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.

**அஸ்வினி வீடியோ சென்ரர்**

198/9, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (85687)

**A.A.S கல்வி நிலையம்**

கே. கே. எஸ். றோட், மருதனார்மடம்

வெளிவந்த O/L பெறுபேறுகளை முன்னிட்டு

A/L 2003

புதிய கலை, வர்த்தக வகுப்புகள்

கணக்கீடு

யாழ். புகழ் கலைச்செல்வன்

O/L DAY CLASS

ஆரம்பம்:24-03-2001

குறிப்பு: அனைத்து வகுப்புகளிலும் யாழ். முன்னணி ஆசிரியர்கள்.

(மேலதிக விவரம் நிர்வாகத்தில்) (85676)

**BRIGHTMAN கல்வி நிலையம்**

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)

பிறவுண் வீதி, யாழ்நகர்.

A/L 2002

CHEMISTRY

INORGANIC

BY:— அன்பு

ஆரம்பம்: நாளை (22-03-2001) வியாழன் - 5.00 p.m.

O/L DAY CLASS

வெகுவிரைவில் ஆரம்பம் (85672)

இதோ.....! யாழ்.நகரில்.....!!

**மங்களகரமான திறப்பு விழா**

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் பங்குனிமாதம் 6ஆம் நாள் இன்று (21-03-2001) புதன்கிழமை காலை 10.50 - 11.50 மணி வரையிலான அவிட்டத்துடன் கூடிய சுபமுகூர்த்த நல் வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள



**சௌமியா ரெக்ஸ்**

**SOUMIYA TEX**



என்னும்

புடைவை வியாபார ஸ்தாபனத்தை இலக்கம் 4, பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்க இறைவன் அருள்பாலித்துள்ளதால் இத்திறப்பு விழாவுக்கு எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், வணிகப் பெருமக்கள் அனைவரும் வந்து ஆசிகூறி ஏகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

சௌமியா ரெக்ஸ், இல.4, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(C/15809)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.